ஸ்ரீ

ஸ்ரீமத்வரவரமுநயேநம:.

ஸர்வம் விஷ்ணுமயம் ஜகத்.

# ஸ்ரீஹரிநாம ஸ்தோத்திரப்பாவும், ஸங்கீர்த்தனமும்.

இவை,

வேலூர்

ஜவுளி கரூர் முநிஸ்வாமி முதலியாரவர்களால்

இயற்றப்பட்டு,

சீ. கோ. அப்புமுதலியாரென்றுவழங்குகின்ற

**கோவிந்தசாமி முதலியாரவர்களால்**

திருத்தப்பட்டன.

---

**திரு. வி. உலகநாதமுதலியாரவர்களால்**

முன்பதிப்பித்தபிரதிக்கிணங்கப்

பரிசோதிக்கப்பட்டு,

மேற்படி கரூர் முநிஸ்வாமி முதலியாரவர்கள் குமாரர்

ம-া-া-ஸ்ரீ,

ஜவுளி கரூர் இராமகிருஷ்ணமுதலியார் குமாரர் ஜவுளி

**கரூர் ரா. நாராயணசாமி முதலியார் அவர்களால்**

வெளியிடப்பட்டன.

---

நான்காம்பதிப்பு.

---

PRINTED AT THE VICTORIA PRESS,

**VELLORE:**

**1930.**

ஸ்ரீ

# சிறப்புப்பாயிரம்.

இந்நூலைத் திருத்திய

## சி. கோ. அப்பு முதலியாரவர்கள்

இயற்றியது.

பன்னிருசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

சீர்மலியு முலகச் சராசர மனைத்தையுஞ் சிருட்டித்த தேவதேவன்
திருநீலை பூமருவி நித்தர்கள் சூழ்பரஞ் செறிபதத் திலகுநாதன்
ஆர்மலியு மடியவர் குழாங்களுக் கன்புகூர்ந் தாளவை வகையதாய
யணிபரத் துவவியூ கவிபவத் தந்தரி யாமியர்ச் சாவதாரந்
தார்மலியுஞ் சோதியாய் நின்றபெம் மானெடிய தாளாளன் மீதுவன்பாற்
றகைவளருந் தோத்திரப் பாவொடுக் கீர்த்தனஞ் சாகரத்தெழுவமுதுபோல்
ஏர்மலியும் வேலையம் பதிவாழு முனிசாமி யேந்தனற் குருவினருளா
லினிமோக்க வீடெய்தி பத்தர்கள் பரவிவாழ்ந் தியங்கிட வியற்றினனனே.

ஸ்ரீ



ஸ்ரீமத்துக்காராம்ஸ்வாமிகள் திருவடிகளேசரணம்.

ஸ்ரீமத்பாண்டுரங்க பரப்ரமணேநம:

# ஸ்ரீ ஹரிநாமஸ்தோத்திரம்.

## அகவல்.

10919

திருமணி மண்டபத் திருப்பூ நீளையார்
மருவிட பக்தர் மகிழுறு முத்தர்
நித்திய சூரிகள் நிதந்து திபரவுந்
சத்துவ குணமுடைச் சலமிலாப் பரமன்
நான்மறைப் புருடன் நாடிய பெருந்தகை
தான்ரு ஞகித் தணிந்த தனிச்சுடர்
முன்னிலை யில்லா மோன முதற்பொருள்
தன்னடி யாருளங் தங்கிடப் பேறருள்
எண்குண ரூபியா யிலகிடு நாதன்
எண்ணெனைக் கொண்டு வெனையறி விக்கப்
பாதகக் கருக்கள் பண்பொடு வகற்றி
மாதமீ ரைந்தென் மாதா வுதரத்
தின்புறச் சேர்த்து வெனைவெளி கொணர்ந்து
வின்பமா முலகத் திருவினை யூட்டிப்
பொன்மண் பெண்ணெனும் பொருடனைக் காட்டிப்
பின்படு தேகம் பிரியமாய் வளர்த்து
வன்பிற் பற்பல வாசையைத் தந்து
துன்பில வகையைத் தொகுத்துக் காட்டிய

நிலைகொளா தெளியே னீண்டரு ளடைய
வலையின் மௌனத் தவாவி லாழ்ந்தி
நானீ யென்னு நாசத் துழலுங்
கானீர் காணுங் கலைபோற் சுழன்று
பவக்கடற் குடும்ப பரிவை நீக்கித்
தவக்கடற் சேருந் தருவாய் நளினி
புருடகா ரத்துவம் புகழுறப் புரிய
தருண முணர்ந்து தமியேன் முன்னர்
சுந்தரத் தாயாய்த் தோன்றி யுவந்து
மைந்த! வெண்ணிய வழியை நிறுத்துக
குடும்பத் திருப்பாய் கேசவ னருள்கூர்ந்
திடும்பை நீங்கிட விசைப்பன் பிரணவ
மென்றென் விடைபெற் றேர்கடி காசல
மன்றுரைத் தேகிய வரியின் பிரியையே
பின்னொரு ஞான்றிற் பொலிந்த விருத்தையாய்
கன்றிய கதலிக் கனியமு தூட்டி
உயர்பிர ணவத்தை யோதுவா யென்றே
மயர்வற மதியருண் மாவே சரணம்
களவனே நாற்காற் கன்னற் பந்தரில்
அளவிலாப் பரம வடியர் குழாமிடை
வீற்றிருந் தருளி மெய்யா கமப்படிச்
சாற்றினுய்ப் பஞ்ச சமக்கார மலரான்
மோகனு மென்றன் வீண்கரம் பற்றி
யாகாய வீதியி லழகிய காலச்
சக்கரங் காட்டித் தரையெனை வீழ்த்தி
அக்கி! கற்பூர வார்த்தி காட்டி
மாணுறுந் துளப மாலையைச் சூட்டி
நீணிலத் தொருவனுய் நின்ற செஞ்சுடரே
குன்றின் மேனின்று குருகிய மூப்பனுய்ப்
புன்மையா மென்குணப் புகல வுணர்ந்து
கசங்கிய தேக காந்திக் காமெணெய்
நிசமாய்க் கொள்ளென நீலனே யுரைத்து
பஞ்சலோ கங்களும் பாரிலிவ் வெண்ணெயான்
மிஞ்சிய தங்கமா மெய்யவென் றீந்து
ஆமுன தெணமெது வென்றெனை வினவிய
ஓமெனும் பிரணவ வொளியி னோங்காரா

இவ்வணம் வார்த்தை யிருந்து நீராடி
எவ்வண மறைந்தா யெனதுளத் தறிவே
பவங்க ளகலவே நவத்தவம் புரிய
பவாதி கிரிதனிற் பாவியேன் சேர
பஞ்சம சாதிப் பாலியனு யிவர்ந்து
துஞ்சுகாற் புகையிலைத் தூடணைத் தந்து
குடும்ப வழயிக் குழவிக் குரைத்து
கடுவனத் தெளித்த கருணையங் கடலே
அந்தண யோகியா யருகினில் வந்து
முந்திய பிரணவ மூட்டிக் காட்டிய
ஆதியே வேங்கட வழகனே வன்பனே
சோதியே கண்ணீர் துடைத்து வாழ்த்தியே
அன்பொடு கரத்தா லணைத்து வாதரித்து
இன்பொ டெனக்கில் விடத்தைக் காட்டி
சுந்தரப் பிரணவச் சுருதியைச் சுட்டி
மந்திர நாத மரபைப் புகட்டிய
கமலவல் விந்தையைக் கழறற் பாலனே
விமலவை போக விஞ்ஞான சொரூபா
பல்வித வுருவம் படைத்தா யவற்றை
புல்லறி வோனியான் புகழற் பாலனே
சுதந்திரப் படுவையோ சுகுண கெம்பீரா
மிதமிற் சாத்வீக மெய்யனே சோதியே
இவ்வித வாடல் யான்பெறச் செய்தும்
அவ்விய பவத்தா லலைகிறேன் மனத்தால்
பழைய வினையின் பான்மையி லழுந்தி
முழுதும் பேதையாய் விழிக்கிறே னுயேன்
எவ்வித முன்னை யிரண்டறக் கலப்பேன்
அவ்வித மெனக்கு வருளு நாயகனே
உம்மைத் துதிக்க வுறுதிலை யெனக்கு
உம்பர் கதிமே லுறையுந் தலைவனே
அந்த காரத்தினி லழுந்திய பாபிமுன்
எந்த நன்மைகண் டின்பமாய் வருவாய்
கடுவள வாயநற் கருமஞ் செய்திலேன்
அடியர் தாட்டூளே யணியவு மில்லேன்
பத்தியாய் நின்றுட் பணிந்து வறிகிலேன்
நித்த முனையுளே நினைந்து மதிக்கிலேன்

தத்துவ நிலையிற் றங்கினே னலேன்
எத்துணைத் தவநிலை யிழைத்தும் பழகிலேன்
எத்திற மில்லா யேழையே னெவ்வணம்
நித்திய ருன்னிவாழ் நீள்பதம் பெறுவேன்
தேவ தேவா செழுமணி முறையோ
மூவர் முதல்வா முகுந்தா முறையோ
அரியரி யகிலத் தாதியே முறையோ
கரிமுறைக் கருளிய காரண முறையோ
சுத்த சாத்வீகச் செல்வனே முறையோ
பத்ம விலாசப் பரமனே முறையோ
இருவினை யகற்றிடு மீசா முறையோ
பிரிவி லானந்தப் பெரியோய் முறையோ
என்னுளந் தங்கு மியோகா முறையோ
சன்ம மகற்றுஞ் சயம்பூ முறையோ
பேதைமை யில்லாப் பேறே முறையோ
காதகர் பவத்தைக் கடிவாய் முறையோ
வசுதே வன்பால் வந்தோய் முறையோ
வசுவார் கடற்றுயில் வளர்ந்தோய் முறையோ
என்னுரை செவிதனக் கேற்க விலையோ
கன்னி மானத்தைக் காக்க விலையோ
தானவர்த் தலைவா தயங்க விடாதே
என்னினை வெல்லா முன்றுதி யாக்கி
யேகனே பன்னெறி போக விடாது
பாகமாய்ச் செய்துன் பதத்தி லமர்த்தும்
உன்றனைத் தவிர வொருபரன் காணேன்
என்றனை யாளு மீச னெம்மானே
நாமகட் டினமு நாடியிந் துதியா
தாமனே பாமரன் சாற்ற முடியுமோ
உன்னிடப் பெருமை யுலகமாய் முடியா
என்னினை வாலே யெப்படித் துதிப்பேன்
அன்பா யுன்னை யழைக்கவு மில்லேன்
முன்புடை மகிமை முணங்கி யறிகிலேன்
அட்டாக் கரத்தை யகத்திற் கொள்கிலேன்
பட்டம் பெறவுனைப் பாடியு மறியேன்
புட்பஞ் சாற்றிப் போற்றியு மறியேன்
எட்டிரண் டறியா வேழையைக் காரும்

எம்பெரு மானே யெழுந்துநீர் வாரும்
வம்புறு தேகம் வருத்தது போதும்
மண்ணினை யுண்ட மாதவா காரும்
விண்முழு தாண்ட வேதனே பாரும்
பித்தனே னென்னைப் பிரிந்து போகாதே
யத்தனே வுன்பா லடைக்கலங் கொண்டேன்
அறம்பொரு ளின்பம்வீ டானாய் சரணம்
விறலுறுச் சின்மய வொளியே சரணம்
அருவறு மதங்க ளமர்ந்தாய் சரணம்
கருவிற் றிருவிலாக் கடையேன் சரணம்
கற்பகத் தருவே கரியனே சரணம்
அற்புதத் திருவிளை யாடலாய் சரணம்
கால மூன்றுங் கடந்தாய் சரணம்
தூல சூக்குமத் தேகா சரணம்
கராவாய்ப் பிளந்த கண்ணா சரணம்
அராவின் வினையை யறுத்தாய் சரணம்
எண்ணில வடியரை யிருத்தினாய் சரணம்
பெண்ணா ணன பிரானே சரணம்
பிரிவினை யில்லாப் பிரியனே சரணம்
கருளன் மேலூர் கடவுளே சரணம்
கம்ச னுயிரைக் கவர்ந்தாய் சரணம்
அம்புத ரூபியா யமர்ந்தாய் சரணம்
கனக மேனியாள் கதியே சரணம்
இனமிலா பக்தர்க் கிறைவா சரணம்
இருவினை தவிர்க்கு மீசா சரணம்
மருமலர் துளப மார்பா சரணம்
தசவித விபவந் தரித்தாய் சரணம்
குசலனைக் காத்த கோவே சரணம்
தசவித விந்திரியத் தலைவா சரணம்
பசலையைத் தூக்கிய பரமனே சரணம்
இச்சை யுடையோர்க் கிதனே சரணம்
மச்சவ தார மானேய் சரணம்
மாதவர் துதிக்கு மகிபனே சரணம்
பூதல மேற்றும் பூசுரா சரணம்
விசுவ சொரூப வேதனே சரணம்
சசிமுக சுந்தர சாமியே சரணம்

வேணுகோ பால வித்தனே சரணம்
தாணுவி லுதித்த சம்புவே சரணம்
பச்சை மேனிப் பரமனே சரணம்
எச்சுத லற்ற ஏகனே சரணம்
பானு கோடிப் பகரனே சரணம்
யானுன் னடைக்கல மாள்வாய் சரணம்
பவளவா யிதழுடைப் பாலா சரணம்
சவுரி ராஜ தயாளனே சரணம்
பகர் குருங்குடிப் பணியே சரணம்
வகுளா பரண வரனே சரணம்
கூர்மவ தாரக் கொண்டலே சரணம்
மாருத் தாண்ட மாயனே சரணம்
நிரைசுக வமுத நிலையா சரணம்
மரைமீ தொளிர்மகண் மகிபா சரணம்
நித்திய சொரூப நெடியோய் சரணம்
தத்துவ ரூபத் தலைவா சரணம்
திரிவிக் கிரமச் சீதரா சரணம்
துரியமுங் கடந்த தூயோய் சரணம்
தீனவி ரட்சகத் தேவே சரணம்
ஆனிரை மேய்த்த வழகா சரணம்
மங்கை ஜானகி மணமே சரணம்
சங்கு சக்கரத் தருவே சரணம்
பேய்முலை யுண்ட புண்ணியா சரணம்
ஆய்ச்சிக ளமுத மருந்தினோய் சரணம்
ஒருமையைப் பூண்ட வுயர்வே சரணம்
திருவேங்கட முடைத் தூயா சரணம்
ஓம்பிர ணவத்தி லுறைபவா சரணம்
ஓம்நமோ நாரா யணாயா சரணம்
வராகவ தார வலவனே சரணம்
தராதலங் கொணர்ந்த சரண்யா சரணம்
விசிட்டாத் துவித விமலா சரணம்
உசிதமாய் நின்ற வுலாசா சரணம்
சாத்விதப் பதமார் சநார்த்தன போற்றி
ஏத்திடு மும்பர்க் கிறைவா போற்றி
சகடா சூரசம் மாரா போற்றி
மகர குண்டல மணிந்தாய் போற்றி

# ஸ்ரீஹரிநாம ஸ்தோத்திரம்.

தில்லைக் கோவிந்தத் தியாகா போற்றி
எல்லைக் கடந்த வெண்குணா போற்றி
ஏழுலகாண்ட வெம்மா போற்றி
ஆழும் பவத்தை யறுத்தாய் போற்றி
எண்ணுதற் கரிய வேகா போற்றி
மண்ணினை யுண்ட மாலே போற்றி
திண்ணிய வாணனைச் சிதைத்தாய் போற்றி
புண்ணிய ரூபப் பிரபுவே போற்றி
எதிபதி யரச ரேறே போற்றி
பதரிகா சலப் பதியே போற்றி
வாமன சொரூப மறையோய் போற்றி
பாமரன் மாவலிப் பணிபவா போற்றி
அட்ட விலக்குமி யிட்டா போற்றி
துட்ட விராக்கதச் சிட்டா போற்றி
அம்புய பாதத் தருளே போற்றி
உம்பர்த் தலைவா வுயர்வா போற்றி
பாண்டவர்க் கரசைப் பகுந்தாய் போற்றி
வேண்டியப் பதத்தை விளக்குவோய் போற்றி
ஏகாட் சரத்தி லிலகினை போற்றி
மோகத் துறுவரை மீட்பாய் போற்றி
தாசர்க ளேற்றுந் தனியே போற்றி
பூசுரர் வாழ்த்தும் புனிதா போற்றி
அனந்த சயனத் தழகா போற்றி
தினந்துதி கொள்ளுஞ் சேவகா போற்றி
அத்திவாழ் வரத வரசனே போற்றி
பத்த ருளம்பதிப் பண்பே போற்றி
அண்ட முண்ட வமலா போற்றி
புண்டரீ காக்ஷ புராதனா போற்றி
தசரதற் புத்திரத் தயாளா போற்றி
சசமத மறுத்தக் கனியே போற்றி
கோமள மேய்த்தக் கோவிந்தா வாழ்க
பூமகண் மருவு மோகனா வாழ்க
எண்டிசைப் பாலர்க் கிறைவா வாழ்க
பண்டு வினையைப் பகட்டுவோய் வாழ்க
காரண காரியங் கடந்தோய் வாழ்க
நாரதா திருடியர் நாடினோய் வாழ்க

தவறி லாமொழிச் சத்யனே வாழ்க
பவமிலா ரூபப் பகவனே வாழ்க
முத்த ருளத்தின் முனைவோய் வாழ்க
எத்திசை யும்புக ழேந்துவோய் வாழ்க
பாற்கட லமுதம் பகிர்ந்தோய் வாழ்க
மார்க்க மொன்றை வகுத்தாய் வாழ்க
என்னுளந் தங்கிய விறையே வாழ்க
புன்புலால் யாக்கைப் புகுந்தோய் வாழ்க
சச்சி தானந்தச் சக்கிரி வாழ்க
இச்சை வைத்தாளு மீசனே வாழ்க
சாந்திபற் சேயைத் தந்தோய் வாழ்க
காந்தனே யாணற் கருத்தா வாழ்க
உயர்நிலைக் கொண்ட வுத்தமா வாழ்க
இயலிசைப் பாக்க ளுகந்தோய் வாழ்க
அத்துவி தப்பொரு ளானோய் வாழ்க
பத்தி வலையிற் பதிந்தோய் வாழ்க
ஆதி மூலமா யமர்ந்தோய் வாழ்க
ஓதிய வேதத் துறைவோய் வாழ்க
சர்வ வலமையிற் சார்ந்தோய் வாழ்க
நிர்வி காரமே நிரந்தரா வாழ்க
சவுரிக் கனியுண் சாமளா வாழ்க
கவுரி நாதன் காதலா வாழ்க
புரந்தர னேற்றும் பொருளே வாழ்க
நிரந்தர மாண்டிடு நிஷ்களா வாழ்க
நினைவிற் கெட்டா நேமியா வாழ்க
முனைவ ரில்லா முன்னவா வாழ்க
சிலைபெண் ணாக்கியத் தேனே வாழ்க
மலைமீ தமர்ந்த வள்ளலே வாழ்க
நாமதே வர்க்கரு ணரணா வாழ்க
காமனை யீன்றக் காரணா வாழ்க
சங்கர ருள்ளந் தங்குவோய் வாழி
இங்கிதக் குணாலய வியல்பா வாழி
சதுமுகப் பிரமனைச் சமைத்தோய் வாழி
யதுகுலம் வந்த யாதவா வாழி
பொங்குபாற் கடலுறைப் பூரணா வாழி
துங்கும் பரம்பதத் துணைவா வாழி

சித்திரக் கூட்டச் செல்வனே வாழி
பித்த னடம்பார் பொன்னடி வாழி
திருவெவ் வுள்ளூர் தீனனே வாழி
பிருந்தா வனத்துட் புகுந்தாய் வாழி
கேசவ நாமக் கோதிலாய் வாழி
கோசல புத்திரக் கொற்றவா வாழி
ஸ்ரீசை லேசச் சிற்பரா வாழி
பூசை கொணேசப் பிரானே வாழி
சீவிலி நகரின் றிருவே வாழி
காவிரி நதிவாழ்க் கனியே வாழி
மணிமுடிப் பூண்ட மாதவா வாழி
திணிரா வணனைச் சிதைத்தோய் வாழி
பாத்திரா பாத்திரம் படைத்தோய் வாழி
கோத்திரா கோத்திரங் கொண்டோய் வாழி
பரத்துவ மாகிய பகாப்பொருள் வாழி
சிரத்தைக் கொளவருட் சீயமே வாழி
வியூகம் வகுத்தருண் மோலோய் வாழி
மயூர நகர்வளர் மாண்பே வாழி
விபவம் பலவுறும் வேதா வாழி
தவம்புரி முனிவர்ச் சார்பா வாழி
அந்தர் யாமியா யமர்ந்தோய் வாழி
உந்தியிற் பல்லுயி ருவந்தோய் வாழி
அருச்சவ தார மடைந்தோய் வாழி
அருச்சனை யவனியோ ராற்றினோய் வாழி
அரிமுத லெழுத்தி லமர்ந்தோய் வாழி
அருவ முருவ மானாய் வாழி
மூவுரு வாகிய முதலே வாழி
நீயொரு சுடராய் நின்றாய் வாழி
குணமுடை ஞானக் குன்றே வாழி
கணமொரு வாக்கங் கண்டோய் வாழி
அண்டஞ் சராசர மானோய் வாழி
பிண்ட மகப்புறம் பொருந்தினாய் வாழி
ஆதியே வாழி அனாதியே வாழி
நீதியே வாழி நின்மலா வாழி
வாதியே வாழி வைகுந்தா வாழி
சோதியே வாழி சொரூபனே வாழி

வாழி பராபர வாழி வாழி
வாழி தயாபர வாழி வாழி
வாழி ஹராஹரி வாழி
வாழி வேங்கட வலவா வாழியே.

# அபயப்பத்து.

## வஞ்சிவிருத்தம்.

புத்திசெய் தின்புகழ்ப் படித்திலேன்
நித்தியத் தண்ணரு ளடைகிலேன்
எத்திரத் தெளியனை யாள்வையோர்
அத்தனே வபய மபயமே. (1)

மாதராம் வலையின் மயங்கியே
பாதகத் துழன்றிடும் பாலனென்
சூதறும் விசும்பின் சொரூபனே
ஆதவா வபய மபயமே. (2)

பிறப்பெனும் பொய்யிருள் போக்கவே
சிறப்புடைப் பன்னுமஞ் சொற்றியே
மறப்பில் லாநந்தம் வளர்த்திலேன்
அறத்தா வபய மபயமே. (3)

இன்னறீ ரெண்ணெழுத் தியம்பிலேன்
மின்னற்போ லாக்கையி னிருவினைத்
துன்னியே பிறப்பி லழிகிறேன்
அன்னியா வபய மபயமே. (4)

ஆழியிற் றுயில்கொள் ளமலனே
தாழியின் வெண்ணுரைத் தகர்த்தவா
பாழினி லியமன் பாராவணம்
ஆழியா வபய மபயமே. (5)

பாசங்கொ ளாசைகள் வளர்த்திடு
நாசமா நிரய நணுகிடா
தீசநன் னெறிக ளியற்றிலேன்
ஆசிதாட் கபய மபயமே. (6)

இறைவா வுலகினர்க் குற்றதாங்
குறையின் வேதத்துட் குறித்திடு
நிறைகனைச் சோதியே நீணிலத்
தறையி லபய மபயமே. (7)

வண்டுழாய் மலரணி மார்பனே
பண்டுயான் வினையைப் படைத்திட்டேன்
தொண்டருந் திரங்கிடுந் தூயனே
அண்டினே னபய மபயமே. (8)

பெண்ணு ணலியிலாப் பிரமமே
புண்ணியத் திண்ணியா பிழைதனை
வண்ணமாய்த் தொகுத்து வகுக்கொணு
அண்ணலே வபய மபயமே. (9)

விஞ்சிய வன்னமீ விளங்குதே
வஞ்சின காலத்து வருமறை
எஞ்சலின் வகையதா யீந்திட்டோய்
அஞ்சினே னபய மபயமே. (10)

---

# அருட்பத்து.

---

## குறுவிருத்தம்.

ஆண்டவா வறிவிலிவ் வொருவ னணுகிடில்
பூண்டிடு மண்டங்கள் பிரியுமோ பொருட்கொண்டு
தாண்டவா சவுரியுண் டருங்கனி யுகந்தவா
நீண்டவா நின்றனை தின்னரு ளருள்கவே (1)

உள்ளமுன் னடியினி லிரங்கவு மில்லையே
கள்ளமா மென்மனங் கனிந்து வாழ்த்திலை
வள்ளலே யித்தனை வாதைப்படா வண்ணம்
வெள்ளமாய்ப் பெருகிடு மெய்யரு ளருள்கவே. (2)

நிறைகொண் மாதவர் நிகழ்த்திடு மழகனே
குறைகொ ணுயின்பாற் குறுகிவந் தாளுவாய்
மறைகொண் டேகினல் வழக்குவந் தண்டுமே
பொறையுடை யானேநின் பொன்னரு ளருள்கவே. (3)

மாசில்லா யீசவோ மாதவோ நாதவோ
கூசில்லா நன்னுலைக் கொணர்ந்து வுயும்படி
வீசிடு மாணவம் விலக்கி வாழ்கவே
பேசிடு நின்னரு வருள்க வருள்கவே (4)

அண்டமும் பிண்டமு மளர்ந்து நின்றவா
சண்டன்றன் றூதர்கள் தண்டிரங் காமுனங்
துண்டனைக் கார்த்தவர் தீண்டிடா வழிபெறத்
தொண்டனே னெனக்குன் றென்னரு ளருள்கவே. (5)

பத்தர்கள் பதைப்பரோ பாவியே னண்டிடில்
முத்தர்கண் முனிவரோ முரஹரி மெய்யனே
நித்தர்க ணீப்பரோ நீக்கிடா தொன்னெறி
அத்தனே யென்றனுக் கருள்க வருள்கவே. (6)

அருவமா புருவமா யாகியார் நிர்மலா
கருவிற் றரித்திடென் காலத்தின் பான்மையோ
ஒருவன் வையகத் துழன்று கெடாமலே
பெருமிதக் கருணைகூர் பேரரு ளருள்கவே. (7)

தந்தையுந் தாயுமாய்த் தகைகுரு தெய்வமாய்
உந்தனை யன்றிவே றொருவரைக் காண்கிலன்
விந்தையை நோக்கியே விமலா விருக்கொணு
அந்தமில் பெரியவீ டருள்க வருள்கவே. (8)

புரந்தரர் பூசுரர் போற்றித் துதித்திடக்
கரந்திடும் பாதங்கள் காணவுங் கூடுமோ
சுரந்திடும் பெரும்பதத் தோய்ந்து வாழ்ந்திட
நிரந்தரா நின்றன தூயரு ளருள்கவே. (9)

வெய்யோன் பாதகன் வீழ்சூது கள்ளத்துப்
பொய்யினி லாழ்ந்துப் புவிமிசைப் பிறழ்கிறேன்
கையிலா மலகக் கனியெனக் கடுகவே
ஐயனே போதிய வருளை யருள்கவே. (10)

# கூட்டுப்பத்து.

### கலி நிலைத்துறை.

ஆதிமூலப் பொருளென் றரற்றிய வானையைக் கார்த்தோய்
சோதியாய் விண்ணிடத் துறையுந் தேவுடை யகத்தே
வாதியா யியங்கும் பரசுகக் கருணைவா ரிதியே
கோதிலா நின்றன தடியரிற் கூட்டுவாய்ப் பொருளே. (1)

உலக முண்டிடு வாயனே யோங்கிடு நிலையே
யிலகும் பேரரு ளானந்த நிர்க்குணக் களிறே
சலங்கொள் பாவியே னூழ்வினைச் சாகரத் தகற்றி
குலங்கொ ணின்றன தடியரிற் கூட்டுவாய்ப் பொருளே. (2)

கட்டிமா ணிக்கக் கலனே முக்கனிக் கன்னலே
மட்டிலாப் புகழை மண்ணதிற் படைத்திடு முகிலே
திட்டியைப் பற்பலப் புன்னெறிச் சிக்கினில் வைத்துக்
கெட்டிடா மனின்ற னடியரிற் கூட்டுவாய்ப் பொருளே. (3)

மதலையோன் வாய்மொழிக் கிரங்கிக் கற்றூணினு ளமைந்தோய்
குதலையாய்க் குணமிலா மொழிவளர் புன்றுதிக் குவந்து
முதலிலா முதலாகிய மோக்கவீ டடையவே முனிந்து
புதல்வனை நின்னடி யார்தனிற் கூட்டுவாய்ப் பொருளே. (4)

குன்றுகை யெடுத்துப் பசுந்தெனக் கூத்தாடுங் கோவிந்தா
கன்றினைத் தூக்கியக் காளிங்க நிர்த்தனக் கண்ணா
வென்றும் பெருகிடு நின்னருள் பெற்றுவாழ்ந் துறுவ
பின்றை யார்நின தடியரிற் கூட்டுவாய்ப் பொருளே. (5)

தீனரக்ஷகத் தீமுறுந் தேனே தெவிட்டாத் தெள்ளமுதே
மோனசுந் தரமுதன் மூர்த்தியே முடிவிலா வெள்ளமே
ஞானமிற் கடைஞனென் பாசங்க ணடந்திடும் பொருட்டுக்
கோனவா நின்றன தடியரிற் கூட்டுவாய்ப் பொருளே. (6)

நாரணா நாயகா விண்மணி நண்மணி யொளியே
வாரணா நின்பதம் போற்றவு மறிகிலேன் வையகக்
காரணா சிற்றின் பத்துறைக் காண்டிடும் பொல்லேன்
பூரணா நின்றன தடியரிற் கூட்டுவாய்ப் பொருளே. (7)

என்னை மாயமோ விருவினை வந்தவா றறியேன்
புன்மையா முடம்பைப் பெற்றிடும் பொய்யனை யுலகோர்
வன்மையா லென்றிகழ் வழுத்திடா காலத்துண் முன்னம்
பின்னமி னின்றன தடியரிற் கூட்டுவாய்ப் பொருளே. (8)

உருகொள் பாரதப் போர்தனி லுலுத்தர் பாற்சிக்கிச்
செருசெயா தொழிந்த வர்ச்சுனன் சிக்கறக் கீதை
அருவதா யுரைத்த வாய்மையை யறிகிலா தழிந்தேன்
பெருமைசே ருன்றன தடியரிற் கூட்டுவாய்ப் பொருளே. (9)

பாவியென் றெனுடைதன் பணிவினை யாளுவாய்க் கோவே
கோவியென் றெனைக்கடைக் கணித்தலு முந்தனுக் கழகோ
பூவில்வாழ் மங்கையை மார்பிடங் கொண்டபூ பதியே
சேவையாய் நின்றன தடியரிற் கூட்டுவாய்ப் பொருளே. (10)

---

# வைகுந்தப் பத்து.

---

## ஆசிரியவிருத்தம்.

ஆதியானப்பிரகாசவாச வனாதியானவரூபமே
நீதியானப்பிரதாபநேச நிரந்தராசிற்சொரூபமே
சோதியாம்பரவாசுதேவத் தொம்பதாபரதீபமே
வாதியாம் விசுவேசபாச வைகுந்தமாபதியீசனே. (1)

அண்டபிண்டநிறைந்திலங்கிடு மாயனேகுணநேயனே
வண்டகண்டமளந்துநின்ற வனந்தனேவணிதூயனே
எண்டிசைப்புகழ்கொண்டமாவலி யேத்துஞ்சுந்தரவாயனே
வண்டுலாவியவனசநாப வைகுந்தமாபதியீசனே. (2)

பேய்ச்சிமாமுலைபருகியோய் பெருந்தாளனேகருணாநிதி
மேய்த்தகோனிரைகாக்கைத்தல மேற்கிரிகொளும்வாரிதி
சாய்ப்புடைத்தசக்கிரீபன்மாமுடித் தாழச்செய்திடுஞ்சீபதி
வாய்ப்பதாமணிமண்டபத்து வைகுந்தமாபதியீசனே. (3)

நாதநாதநாராயணாபொறி நங்கைதங்குமனோகரா
ஏதமின்றியநாரதாதிய ரேத்திபோற்றுநிரந்தரா
போதராக்கம்பொருந்தியங்கிய பூபணையதுரந்தரா
வேதநாலுமறிந்திலாத வைகுந்தமாபதியீசனே. (4)

குஞ்சரத்தினிடுக்கண்டீர்த்திடு கோதிலாபற்பபூமனே
வஞ்சிதீவினைநீக்கிகௌதமன் வாழ்க்கைசேர்த்தருடாமனே
சஞ்சலத்துறும்பஞ்சவர்க்குமே தஞ்சமீந்திடுநேமனே
விஞ்சுலாவியவேதரூப வைகுந்தமாபதியீசனே. (5)

கன்றெறிந்துகனிகள்வீழ்த்திய காதலாகடல்வண்ணனே
என்றுபங்கிலும்வந்துகார்த்திடு மிண்டையார்ந்திடுகண்ணனே
அன்றுவாழியிலமரர்வாழ்த்திட வாண்டவாபுயத்திண்ணனே
மன்றுளாடுமந்த்ரோதரா வைகுந்தமாபதியீசனே. (6)

தேனுலாவியமாலைபூண்டசெந் தேவதேவசிகாமணி
பானுகோடிப்பிரகாசவெண்குண பக்தரக்ஷகமாமணி
மானுலாவியகாடுசென்றிடு வரன்பராவியதூமணி
வானுலாவியகோனனுய வைகுந்தமாபதியீசனே. (7)

கல்வினுண்ணரசிங்கரூபியாய் கணமுதித்தவரோதயா
சொல்லினுள்ளுமகிழ்ந்திலங்கிடு சோதியான நிதோதயா
அல்லலாயபவத்தழுந்துந ராவியாருஞ்சதோதயா
மல்லர்புன்னகையோச்சவந்த வைகுந்தமாபதியீசனே (8)

அளவிலாசுகமன்பர்க்கீந்திட வணுவினுள்ளணுவானவா
களவிலாத்துரோபதையினுடை களையவீந்துமேகார்த்தவா
வளர்ந்துநீண்டமருதங்கீழ்பட வாரிதாளில்வளைத்தவா
வளமைமீதெழுநித்தர்வாழும் வைகுந்தமாபதியீசனே. (9)

மந்திரரூபவிலாசனேசக மாயமர்ந்தசர்வேசனே
தந்திரமாயதனஞ்சயன்பரி தாழ்ந்துவோட்டுமுலாசனே
சுந்தரரூபசுதாகராவளர் துளபவாரபலாசனே
வந்துவேங்கடமீதுநின்ற வைகுந்தமாபதியீசனே. (10)

ஸ்ரீ ஹரிநாம ஸ்தோத்திர முற்றும்.

ஸ்ரீ



ஸ்ரீமதேராமாநுஜாயநம:

ஸ்ரீமத்வாஸுதேவ பரப்ரஹ்மணேநம:

# ஸ்ரீ ஹரிநாம ஸங்கீர்த்தனம்.

## வஞ்சித்துறை.

ஆர்த்திகொள் ளடியரைக்
கார்த்திடுங் கடவுடஞ்
சீர்த்தியைத் தெளிவுறுங்
கீர்த்தியாற் கிளத்துவாம்.

## தோடயம்.

### நாட்டைராகம்—ரூபகதாளம்.

1. ஜயவிஜய விலக்குமி மனோகரா
ஜயவைகுந்தத்து ளுறையுந் தயாபரா
ஜயவடியாரை யாள் கிருபாகரா
ஜயகீர்த்தனஞ் சொல்லவே ஆ ஆ.

2. ஜயமாய்சேஷன்மேற் றுயில் பராபரா
ஜயவிலாச நிற்குண சுபாகரா
ஜயவமரர்கள் துதிக்குந் தினகரா
ஜய திருவடித் துணையே ஜய ஜயா.

3. அகாரவாச்யனு யமர்ந்த வீசனே
ஆதியே பரஞ்சோதி வாசனே
பகரும் வேதத்தின் முடி விலாசனே
பாரளந்தபிரகாச போசனே ஆ ஆ.

4. சச்சிதானந்த சருவ ரூபனே
சதுமுகன் றனைச் சமைத்த நாபனே
உச்சிதச்சக்ர மொளியுந் தாபனே
ஓம்நமோவென வுளத்தி லுதித்தோனே ஜய ஜயா.

5. மச்சகூர்மவ தாரஞ் செய்தவா
மந்திரகிரியினு லமுதங் கடைந்தவா
எச்சிற்கனியின்மே லின்பங் கொண்டவா
எம்பெருமா னுருகந்தவா ஆ ஆ.

6. சந்திரசூரியரா யொளியும் பூசனே
தயங்குந்தாரகை யுறையு நேசனே
நந்தனகத்தினி லியங்கும் பாசனே
நயந்தென்முடிவளர் வேங்கடேசனே ஜய ஜயா.

---

## அடாணுராகம்—ஆதிதாளம்.

### பல்லவி.

நாராயணு நமஸ்தே - ஓம்நமோ
பாராயணு நமஸ்தே.

### அநுபல்லவி.

காராயகண்டகுணு காராநின்மல சீரா
கமலமேலுறையும் விமலைமணே கரா
விமலஞானிகளா லேற்றுந்தயா பரா
நாராயணு நமஸ்தே.

### சரணங்கள்.

1. அண்டரண்ட பிர்ம்மாண்ட சராசர
மாகிநின்ற போகா பாகா யோகா யேகா
பிண்டமகப்புறம் பிறங்கியுறைந்திடும்
பிரமமாய மோகா மேகா தேகா மூகா
தண்டணிதுளப மணிந்திடு மாரா
சனகியொடுபெஞ்ச வடிநின்ற சூரா

கண்டாகனன்றனைக் கார்த்தவொய் யாரா
கலைமகட்கொழுநனை யீன்றவுத் தாரா
வானமாகி துலங்கும் - வசுதேவன்
தீனனாக யிலங்கும் - வணமுதித்து
மாணமுடையிடைச் சேரியி லூர்ந்த
மதித்திடத்தயிர்பால் வெண்ணெயை யார்ந்த
நாணமற்றுக்கோக்க ணடத்தியே தேர்ந்த
நடனஞ்செய்துகட் செவிதனை யீர்ந்த

நாராயணா நமஸ்தே.

2. சித்தராதி முனிவோர் ஜயஜயவெனத்
தூக்கியாடும் பாதா போதா நீதா நாதா
உத்தம வாழியிற் றுயின்றுரங்கியே வளர்ந்
தோங்கி தங்குஞ் சூதா பீதா வேதா கீதா
நித்தனைபிரக லாதனற் பதியே
நிலமதையளந்தவா மனனாய ததியே
சுத்தரானஜன காதிகள் கதியே
சுருதியண்டிடாத் தொம்பத நிதியே
வத்துவான ஆதி - காரிதனை
வளைந்துகார்த்த சோதி - நீதி
எத்திசையும்புக ழோங்கிய பரனே
எண்ணிலாவடியரைக் கார்த்தசா கரனே
பத்திதந்தாட்கொளும் பாவியை யுரனே
பாண்டவர்க்காய்த்தூது சென்றமித் திரனே

நாராயணா நமஸ்தே.

3. தடங்கிடந்தரும் பாறைவினைதனையைத்
தகைந்துநீக்கிய நாபா சோபா தீபா ரூபா
படர்ந்தரூபங்கொண்ட பாபிதாடகையைப்
பதைக்கத்தாக்கிய கோபா சாபா ஆபா தாபா
மடமயிற்சவரியின் மாங்கனி யுண்டு
மதித்திடாவனுமனுந் துதிக்கவே கண்டு
விடமானவாலியின் முடிதனை யாண்டு
விஜயஞ்செய்துதச முடியோனைப் பண்டு
நீண்டபதத்திற் சேர்த்தாய் - விபீடணன்
நினைவின்படியே கார்த்தாய் - பத்தர்க்காய்

நிலமிசைவந்தவ தாரவோ வாசா
நெடின்மலநீக்கி யாண்மந்திர வீசா
குலநலமற்றக் குவலயத் தேசா
குறிப்பதற்கரிதா கியவேங்க டேசா
நாராயணு நமஸ்தே.

---

## நாகவராளிராகம் — ஆதிதாளம்

### பல்லவி.

அன்னைசொற்றவருத வாதியடிக்கபயம்
அடியேனைக் கார்ப்பாய் சமயம்

### அநுபல்லவி.

மன்னன்ஜனகன்மகளை மலர்மாலையிட்ட பாதா
மாதவர்கட்காய்வந்த மந்திரவுல்லாச போதா
அன்னைசொற்றவ.

### சரணங்கள்.

1. ஒண்டிதாவரம்போல வுவந்திடுமனதிறைல்
ஓய்விலாமலலைய வுரிமையானேனிதினல்
அண்டிவுன்னன்புட்சேர அறிகிலேன்மதியினல்
அயனரனரியான அமலனேததியினல்
அன்னைசொற்றவ.

2. சத்தரிஷிகளேத்தும் சச்சிதாநந்ததீபா
சாகரத்தைக்கடந்த சாயுச்சியபதரூபா
அத்திதுயரந்தீர்த்த வானந்தஜகதாபா
ஆதியந்தமிலாத வகண்டசாம்ப்ராஜ்யபூபா
அன்னைசொற்றவ.

3. தண்டகாரண்யர்க்கபயந் தந்தசுந்தரநாதா
தாசன்குகனுக்கன்று தாளடிதந்தபோதா
அண்டொணுவிராதன்றுதி யகமதிற்கொண்டநீதா
அழகியதசக்கிரீப னணிமுடிக்கொய்தபாதா
அன்னைசொற்றவ.

4. காலன்றனைக்கண்டக்காற் கலங்குமென்சிந்தைவாசா
கபடநாடகாவென்னைக் காட்டாதேசுகநேசா
பாலனென்றெண்ணியேநின் பத்தர்பாற்சேருமீசா
பாற்கடற்கடைந்திட்ட பார்வேங்கடேசபோசா
அன்னைசொற்றவ.

## ஆனந்தபைரவிராகம்—ஆதிதாளம்.

### பல்லவி.

லக்ஷ்மிநாயகா ஸ்ரீ லக்ஷ்மிநாயகா.

### அநுபல்லவி.

லக்ஷ்மீநாயகாகெம் பீரா பக்ஷீவாகனசுரேந் திரா
இக்ஷுவாகுகுலோத் தாரா எதிகளேத்துமேக சூரா
லக்ஷ்மீநாயகா.

### சரணங்கள்.

1. முத்தருளங்கொண்ட நாபா மூவுலகளந்த பூபா
அத்திமுறைகார்த்த தாபா அண்டாண்டமான தீபா
லக்ஷ்மீநாயகா.

2. சச்சிதாநந்தசர் வேசா சச்சமயமான வீசா
வுச்சிதபதந்தா பூசா வுரியில்வெண்ணெயுண்ட வாசா
லக்ஷ்மீநாயகா.

3. சங்கற்பமெனும் வலையில் தங்கியாழ்ந்தேனே யன்னிலையில்
பொங்குந்தாசர்தா ளடியில் போற்றும்வேங்கடத்தா தலையில்
லக்ஷ்மீநாயகா.

---

## அசாவேரிராகம்—சாபுதாளம்.

### பல்லவி.

சோர்ந்துபோகாதே - மனமே - சோர்ந்துபோகாதே.

### அநுபல்லவி.

தேர்ந்தபரமனும் வந்து - நம்மைச் - சேர்த்துக்கொள்ளுவா னுவந்து
சார்ந்தநாதத்திற் கலந்து - அரி - தாளைத்துதித்திடாய் நினைந்து
சோர்ந்து.

### சரணங்கள்.

1. கானலைப்போனின்ற சூளை - மாரைக் - கண்டுமயங்கின்றாய்நாளை
தானல்லோதெரியுங் காளை - சுற்றந் - தங்கிவருமோயவ் வேளை
சோர்ந்து.

2. பெண்டுபிள்ளைகளுங்கூடி - நம்மைப் - பிரேதமென்றுநீ ராடி
கொண்டுசுடுகாடு தேடி - நாளைக் - கொளுத்துவரேயாருங் கூடி
சோர்ந்து.

3. இந்தஜன்மஞ்சே ராதே - போனு - லெந்தஜன்மமு நாடாதே
அந்தகாரத்தில்வி ழாதே - அவன் - தந்தமொழிமற வாதே
சோர்ந்து.

4. இன்னங்காணவில்லை யென்று - நீ - யேனழுகவில்லை யின்று
மன்னன்சபைதனி லன்று-சுத்த-மாதைக்கார்த்தான்றுதி நன்று
சோர்ந்து.

5. அட்டமாசித்தியும் புரிவாய் - நல்ல - ஆனந்தபோகத்தி லுறுவாய்
சிட்டிதிதிகளைப் பெறுவாய் - எங்குஞ் - செல்வமாகவு லாவுவாய்
சோர்ந்து.

6. வேதனையின்றவென் னேசன் - சுக - வேங்கடேசனுன வீசன்
சோதனைசெய்குவான் வாசன்-பொற்-சூழ்ச்சியிற்சேராதேபாசன்
சோர்ந்து.

---

## மூகாரிராகம்—ஆதிதாளம்.

### பல்லவி.

மண்கொண்டு போகுமே - இக்காய மனமே
மண்கொண்டு போகுமே.

### அநுபல்லவி.

கண்முன்னுகவுலகக் காக்ஷியைக்கண்டு மானுய்
கண்ணனடிகளின்மேற் கருத்திலாமலே வீணுய்
மண்கொண்டு.

### சரணங்கள்.

1. பெண்டுபிள்ளைகளைப் பம்பி கண்டபடியே ததும்பி
சண்டனுலறைந்து வெம்பி தண்டனுகின்றுயே நம்பி
ஆடுருய் - அவமதாக
வாடுருய் - அஞ்ஞானவழி
கூடுருய் - ஆபாசமாக
மண்கொண்டு.

2. நாதவொலிதனைக் கண்டு நாடிவடிமுடி பூண்டு
பூதவைவர்களைச் செண்டு போலவேபிடித்துக் கொண்டு
கட்டிடு - அஜபாநலத்தாற்
ருெட்டிடு - அசைவிலாமல்
எட்டிடு - ஆனந்தமாவாய்
மண்கொண்டு.

3. சக்கரம்போற்சுழ லாதே சக்கரபாணியை விடாதே
சிக்கும்பவத்துழ லாதே சிதரணைப்பிரி யாதே
ஆசிப்பாய் - அட்டாக்கரத்தாற்
பூசிப்பாய் - வெங்கடேசனை
நேசிப்பாய் - இடைவிடாது
மண்கொண்டு.

---

## எ.—சாவேரிராகம்—ஆதிதாளம்.

### பல்லவி.

கண்ணன்மங்களங்கொண்ட காக்ஷியைக்களித்திடக்
காணலாம்வாராய் மனமே.

### அநுபல்லவி.

தண்ணளி மலரானை தன்னிடமகிழநீனை
வண்ணமாய்க்கொளுநற்றுனை வழிபடவேயிவ் வேளை
தாம் தாம் தாம் தகணு ஜெணுத்தஜெணு
தீம் தீம் தீம் நாதரி தில்லாணு தந்தரி
ஓதரி தாரி தகரி தாரி தீம் தில்லாணு
தின்னந் தகஜம் தரிகிடதோம் தின்னந்தகஜம் தரிகிடதோம்
கண்ணன் மங்களம்.

### சரணங்கள்.

க. கொன்றைமலர்தரித்தக் கிரீசனுமொருபால்
குரவணுகியவன்ன வாகனனொருபால்
பொன்றலிலாதமரப் புரந்தரனொருபால்
புகழுறுமறையோதும் பூசுரரொருபால்
பன்னிதுன்னிகொண்டு-சேவையைக்கண்டு
பலருமகிழ்வார் விண்டு
இன்னிசைநாரதர் யாழினுற் றடிக்க
விசைக்குந்தசநாத மெக்காள மொடிக்க
மன்னியமறைகண் மங்களம் படிக்க
மாதர்கணல்வ ரத்தலம் நடிக்க
விண்ணுளுறைகெந் தருவர்மலர்போட
விரைந்துபத்தர்கட்பல் லாண்டுகள்பாட

எண்ணிலா தசித்த ரேகமாய்க்கூட
எம்பெருமானென் றெதிகளுந்தேட
தாம் தாம் தாம் தகணு ஜெணுத்தஜெணு

கண்ணன் மங்களம்.

2. அறம்பொருளின்பம்வீ டமர்ந்தவன்சீராய்
அழகியபூதல வாதியைப்பாராய்
மறைபுகழெண்குண மகிபனைநேராய்
மந்தகாசமந் திரனிடம்வாராய்
நரகரியவர் தானே ஞானங்கடந்த
நாதனைப் பார்மானே
உரங்கொண்டசாமவேத வுல்லாச துங்கன்
உயிர்க்குயிரான வோங்கார வங்கன்
சிரவணமனன நிதித்யாக சங்கன்
செகரக்ஷகசொரூப செல்வ புங்கன்
காமதிற்பஞ்சா யுதந்தரித்தோன்
கதிதருமேனை டுக்குரித்தோன்
இரவிமதியாய்நின் றேயெரித்தோன்
இலகுஞானானந்தப் பொருள்விரித்தோன்
தாம் தாம் தாம் தகணு ஜெணுத்தஜெணு

கண்ணன் மங்களம்.

3. அர்ச்சாவதாரசொ ரூபனையமர்ந்து
அடியர்களித்திட வானந்தந்தந்து
மெச்சும்ஸ்ரீவேங்க டேசனுகவேவந்து
மேதினியிலுதித்தோன் மெல்லடிபணிந்து
எச்சுதலறப் பாரும் - அவன்சேவையால்
இருவினைகளுந் தீரும்
இச்சைகொண்மாதவ ரேத்திய கோவை
யோர்தருபூபதியாய் வந்த தேவை
பச்சைமேனிப்பர மாத்மனருள் சேவை
மணியவிதுசமயம் பஞ்சவர் பூவை
ஆசையாகநின் றரிகரி யென்னும்
அந்தகாரமா மடங்கலுந் தின்னும்

மோசம்போகப்போ ருய்குரு வென்னும்
முதல்வன்ருள தனின்மோனமாய்மன்னும்
தாம் தாம் தாம் தகணு ஜெணுத்தஜெணு
கண்ணன் மங்களம்.

---

## 8. ஆஹிரிராகம்—சாபுதாளம்.

### பல்லவி.

கருணையம்பதிவாசா - என்னைக் - காருஞ்சருவேசா

### அநுபல்லவி.

துருவாதி துதிக்குவந்த - தோதா - அருணீதா - சுரபாதா
கருணையம்பதி.

### சரணங்கள்.

1. மட்டிலாத பிறவியொன்றி - மயங்குகின்றே னதிலேகுன்றி
கெட்டியானவினையைக்கீன்றி - கெதிதா - காலஅதிதா-குலபதிதா
கருணையம்பதி.

2. நந்தனுள்ளங்களிக்கவந்த - நடனபாதநளினவிந்த
மந்திரார்த்தமானசொந்த - மதியே - யோகநிதியே - பாகவிதியே
கருணையம்பதி.

3. சித்தாதிமுனிகள்போற்ற - சேஷசயனமாகியுற்ற
அத்திமுறையை யூர்ந்து கார்த்த-ஆரணு-பரிபூரணு-வுயர்காரணு
கருணையம்பதி.

4. வேணுநாதங்கொண்டகேசா - வேங்கடேசபிரமயீசா
நாணும்பரி தேரூர்ந்தபோச-நாதனே-ஜகபோதனே-சுகவேதனே
கருணையம்பதி.

---

## 9. ஆனந்தபைரவிராகம்—ஏகதாளம்.

### பல்லவி.

உளத்திலுன்னைத்துதிக்கவேவருமோ - உன்னடியார்போல
உருகியுன்ருள் சேரவேவருமோ.

### அநுபல்லவி.

பலத்தமோக வினையை நீக்கி
பக்ஷமுடனும்மை யிச்சையாகத் தாக்கி
உளத்திலுன்னை,

சரணங்கள்.

1. காமமென்னுங்கலைக் கொண்டேனே - மோகாந்தகார
காடதனிலேநின்று தொண்டேனே
பூமாவுந்தனும முண்டேனே
புகழ்வனேபொன்னனுரங் கீண்டேனே
உளத்திலுன்னை.

2. சரஜிசநாப சயன வுத்தாரா - சாயுஜ்யநிலையில்
சார்ந்துநின்றகெம் பிரவொய்யாரா
நிரம்பராநிற் குணபராபரா
நித்தியசுதாகர நின்மலவோங்காரா
உளத்திலுன்னை.

3. தவமுனியாகங் கார்த்தப்ரகாசா - ஜனகன்மகளைத்
தனைமணந்து வாளுஞ்சர்வேசா
பவமதை நீக்கிடும் பரமபதவாசா
பாருங்கடைக்கண் ணற்பாலனையீசா
உளத்திலுன்னை.

---

## 10. சௌராஷ்டிரராகம்—அடதாளம்.

பல்லவி.

நந்தன்வீட்டில்வளர்ந்த - நாகசயனவென்னை
நாடிவாரும் ரங்கநாதா.

அநுபல்லவி.

முந்தியானையைக்காத்த - முரகரிஞால பாதா
அந்தமாதியிலாத வடியாருளத்திற் போதா
நந்தன்.

சரணங்கள்.

1. காலாகாலந்தாசருள் கலந்துவாழ்ந்திடும்பூசா
கமிசனுயிரை மாய்த்த கமலக்கண்ணனேபாசா
ஆலிலையின்மீதி லமர்ந்ததாரகநேசா
அண்டரண்டபுவன மளந்தப்பாதனேவாசா
மூலகாரணமான சீர்த்தியே
முச்சுடராய்நின்ற பூர்த்தியே
சாலவேபுகழோங்கும் கீர்த்தியே
சான்றவர்க்கருளாதி மூர்த்தியே
நந்தன்.

2. அடுத்தசங்கற்பங்களா லெடுத்தேன்பிறவிசீலா
அளவில்லையென்றன் பிராணலோலா
தடுத்தாளுன்னருளினு லடுத்தேனேபற்கோலா
தன்னியாபேய்முலை யுண்டபாலா
கொடுத்தமறைவிதி குணத்தையறிகிலேன்
குறித்துவுனைநிதமுளத்திற்றுதிக்கிலேன்
கடுத்தபவத்தில் விழாமற்கொள்கிலேன்
கதித்தநீள்பதங் கருத்திற்றரிக்கிலேன்
நந்தன்.

3. பந்தனைகளைத்தீரப் பரிந்துவாருமென்கோனே
பஞ்சவர்பத்தினியைப் பட்சமாய்க்கார்த்ததேனே
அந்தகனுக்கஞ்சாமல் அருளுவாய்சீமானே
அலருஞ்சரோருக மமர்ந்தவேங்கடேசனே
உந்தன்மீதினி லுவக்குமெண்ணமும்
உடைந்துபோகுது பஞ்சபூதமும்
எந்தவிதமாக வேற்றும்பாதமும்
இதயந்தங்குமோ வெளியன்ஞானமும்
நந்தன்.

---

## 11.—சங்கராபரண ராகம்—திரிபுடைதாளம்.

### கண்ணிகள்.

1. தீனரக்ஷக ப்பியகா திருவருடாரு நேயகா
ஞானசுந்தரத் தூயகா ஞாலநளினமங்கைசேர் நாயகா
2. சுகவிலாச தீபனே சுருதியானப்பிர தாபனே
ஜெகமுறைந்திடு நாபனே செங்கமலமாதுறை மார்பனே
3. ஐம்பூதமா யமர்ந்தவா அமரர்க்கமுதந் தந்தவா
எம்பெருமானுய் வந்தவா யேகமானவாவென்னு ளானவா
4. பாலனென்று பாருமே பத்மபாதமதனிற் சேருமே
கோலமாய்வந்து காருமே கோவிந்தவேங்கடஞ் சாருமே

---

## 12.—செஞ்சுருட்டிராகம்— ஆதிதாளம்.

### கண்ணிகள்.

1. ராம ராம ராம சீதா ராமா வாராய்-அகண்ட
நாம சத்துவ நித்திய பத னின வாராய்

2. எண்டிசை யேத்தும் பிரகாச வெதியே வாராய்-எந்தன்
இடர்தனை தீர்த் தாளும்பர வேகா வாராய்

3. மங்கையை மார்பிட மேந்து மதன வாராய்-சுத்த
மாதவ ருளத்திற் றங்கு மகிபா வாராய்

4. அத்தியைக் கார்த் திட்டவாதி மூலா வாராய்-அயன்
அரன் முதலோ ரேத்துஞ்சோதி யனந்த வாராய்

5. பூதகி முலையை யுண்ட புண்ணியா வாராய்-பல
போதகர்க் கரிதாய் நின்ற போகியே வாராய்

6. திரிகுண வோங்கார திவ்விய தேசா வாராய்-இந்திரன்
திகிலிடக் கோகிரியைக் கொண்ட திண்ணியா வாராய்

7. அண்ட முண்ட வமலரூப வணுதி வாராய்-அசோதை
அணைத்த கயிருற் கட்டுண்ட வரியே வாராய்

8. பாவியேன் பவங்கடிக்கப் பரனே வாராய்-குரு
பாதவேங்கடேசபுர பதியே வாராய்

---

## 13. –அபூர்வராகம்—சாபுதாளம்.

### கண்ணிகள்.

1. ரச்சகாவென்மேல் கச்சிசெய்யாதே ஓ
மெச்சுநின்றுளின் மென்மையாக்குமே ஓ

2. உந்தன்கருப்பத்தி லுகந்துதங்கவே ஓ
நந்தனந்தனு வந்தமாகவே ஓ

3. அச்சுதாபாரும் லச்சைசெய்யாதே ஓ
உச்சிதமாக மெச்சவேசேரும் ஓ

4. நாலுவேதமும் நாடறிந்திலா ஓ
கோலமானதை கொள்வனேசிலா ஓ

5. சத்துவரூபியாய் சார்ந்தசத்தியனே ஓ
தத்துவவானந்தா தசரதச்சேயாய் ஓ

6. சருவசீவனிற் றங்குமீசனே ஓ
தருநிகரிலா சத்தியவேங்கடா ஓ

---

## 14. புன்னாகவராளிராகம்—சம்பைதாளம்.

### கண்ணிகள்.

1. பன்னகசயனாவெனைப் பார்ப்பாயோமலர்க் கண்ணா
பார்த்தாலல்லோபாபங்களைப் பகைப்பேன்மேக வண்ணா
உன்தாளடையத் தேகங்கொண்டு முழலுகின்றேன் புண்ணா
யுத்தமனே பொன்னடிதந் துந்துகாருந் தண்ணா

2. பிள்ளைசெய்த குற்றங்களைப் பொறுப்பதுபோல் பெரியோய்
பேதையென்மீக்கொண்ட கோபம்போக்காயோ நற்கரியோய்
கள்ளமான கசடன் றுதியை கருணைகூர்ந்தாள் பிரியோய்
காரணனே நின்னைவிடக் காரணரார்கா ணரியோய்

3. எந்தன்பவத்தை யெண்ணியெண்ணி யேங்குகின்றே னய்யா
ஏழையின்மே லருட்கண்பாரு மேகமான மெய்யா
வந்தனைகள் புரிந்தவென்னை வஞ்சனைசெய்யாதே செய்யா
வாழநின்னடியாருடன்சேர் வகுளாபரணத் துய்யா

4. அறமுதலாகிய வினையை யறிந்திலேனே காரணா
ஆதுலர்க்கு வேணதான மமைத்திலேனே பூரணா
நிறமுடைய வடியாரடியி னீழற்கொள்ளிலே னாரணா
நீள்விசும்பாயானசுந்தர நின்மலாஜக வாரணா

5. திரிகுணவோங்கார ஜகதிவ்யரக்ஷக நாதா
தீனருத்தவர்க்கருளளித்த தினகரரூப போதா
வரிசிலையைவளைத்தோங்கும் வாரிசாக்ஷ நீதா
வானவரேத்தும்வரதவலவாபிரக்கி யாதா

6. அன்னைதந்தை குருவுமாகி யாதரித்திடும் வாசா
அடுத்துக்கால னுயிரைக்கொய்து யழைப்பனேயென் னீசா
என்னோ வவன்பாற்சமரிழைத்திட வேங்குவனோ பூசா
ஏற்றினேன் வந்தெனையக்கண மேற்பாய்வேங்க டேசா

---

## 15. மத்தியமாவதிராகம்—ஆதிதாளம்.

### பல்லவி.

துரிதமாய் வந்துநின் றெண்டரிற் கூட்டாய்.

அநுபல்லவி.

கரியிருட் கடிந்த கமலத்தாள் சூட்டாய்
பரியினை யூர்ந்த பரமனே நீட்டாய்
துரிதமாய்.

சரணங்கள்.

1. கருங்கிடா மீதேறி கருணையில்லாமற் ருவி
அரிமாபோற் காலன் கூவி யழைப்பானேபடு பாவி
ஆதரிப்பாய் நீயென்று வடைந்துதே யெந்த ஞவி
துரிதமாய்.

2. இருவினையெனுந் தீ யெரிக்குதே அய்யனே
என்மன மலையா திருக்கிலே துய்யனே
ஏழையர்க் கிரங்கு மிருளிலா மெய்யனே
துரிதமாய்.

3. உனைவிடக் கார்ப்பவ ருண்டோபற் பரனே
ஓங்காரமான வுபர்சரா சரனே
உரிதனிலமுத முகந்தசெந் நரனே
துரிதமாய்.

4. தாயிலாச்சேய்போற் றவிக்கின்றேன் மணியே
காய்தலிற்சூழுங் கடல்வண்ண வணியே
கருவுணுழையாமுன் காத்திடாய் பணியே
துரிதமாய்.

5. மாதவ யெதிபதி மதனசுந்தர கதி
வேதனர் சுகமதி வேணுகோபால நிதி
நாதவேங்கடபதி நாயினை யாள்வாய் ததி
துரிதமாய்.

---

## 16. காம்போதிராகம்—ஆதிதாளம்.

பல்லவி.

அன்புகொண்டெனை யாதரித்தருளே
அம்பரீஷன் றுதிப்பொருளே.

### அநுபல்லவி.

மன்னும்வேங்கட மலைதனிலுறைசுபா
மாதவனே முரகரிநாபா
கன்னன்மொழிலக்குமி கலந்துவதியுந்தீபா
காருமெந்தனையூபா பாருமனந்தரூபா
அன்புகொண்டேனே.

### சரணங்கள்.

1. அண்டயோனியிட மமர்ந்தநிர்க்குணதூயா - அமலமாகி
அண்டமாகவேநின்ற சிற்சுகதாயா - அற்புதமாக
பண்டுகரிமுறையைக் கண்டுகாத்திட்ட மாயா
பார்மணியே கற்பக சேயா
எண்டிசைகள்துதி கொண்டபர நேயா
ஏகாவெங்கும்வியாபக தேகாவாகம வாயா
அன்புகொண்டேனே.

2. பாசவினைதனை நேசமாய்க் கொண்டேன் - பவத்தினால்
மோசம்போகின்றேன் ருசாவுந்தன்றுண்டேன் - மூவுருவான
ஈசாவுன்னடியார்தா ள்களைத் தாராய்
நேசமானசகச நேர்ந்திடப் பாராய்
ஆசைவலையிற்சிக்கி யழுந்திட்டேனே நேராய்
ஆருமுனதுபதந் தாரும்பிரானே சீராய்
அன்புகொண்டேனே.

3. காலதூதர்கள் சூல மெறிவாரே - என்வேங்கடேசா
கோலமாயுயிர்கொண்டு போவாரே - அப்போதுன்மனம்
சாலஞ்செய்புமோவரி சாத்வீத நேமனே
சவ்வியசாசிக்குச் சாரதியாந் தாமனே
பாலருடனுயர் படியுறை பூமனே
பாரளந்துப்பெலியை நேரளந்த வாமனே
அன்புகொண்டேனே.

---

## 17. சங்கராபரணராகம்—ஆதிதாளம்.

### பல்லவி.

உன்னைவிட முதலுண்டோ எந்தனைக்காக்க

அநுபல்லவி.

பன்னகசயனனே பாண்டவர்நயனனே
உன்னைவிட.

சரணங்கள்.

1. காலதூதர் வருவாரே வந்து
சூலத்தாலே யெரிந்து
கோலமாகப் பரிந்து
நீலன்வசம் விடுவாரே அப்போ
நிலைகலங்கியென்சீவன் கலைகலங்கிடுங் காலம்
உன்னைவிட.

2. பாருலகில் தேகங்கொண்டேன் கொண்டும்
காரிருள்தனிற் சிக்கி
நாரிகளின்பாற் றக்கி
பேரருளை மறந்தேன் எந்தன்
பேதைமைதனை நீக்கி மாதவனாகக் கொள்ள
உன்னைவிட.

3. நாதமுடிவான தீபா எங்கும்
போதனாகவே தங்கும்
புண்ணியவனந்தா பொங்கும்
ஆதனாய்நிகழு நாபா என்னை
ஆதரியும்வேங்க டேசனாய் நின்றரூபா
உன்னைவிட.

---

## 18. அசாவேரிராகம்—ஆதிதாளம்.

பல்லவி.

ஒருமொழிபுகலாய் - எந்தனுடன்
ஒருமொழிபுகலாய்

அநுபல்லவி.

கருவினைகொண்டநாள் முதலாய் - உன்னை
காணேனே தேவகி மதலாய்
ஒருமொழி.

சரணங்கள்.

1. பஞ்சவர்க்காய்த் தூது சென்று - பொல்லா
பாவியரசன்பா லன்று

கஞ்சமலரோனே நின்று - பிச்சைக்
கெஞ்சிக்கெஞ்சிக் கேட்டாய் நன்று

ஒருமொழி.

2. பற்குணன்மேல் வைத்த வன்பு - பாலன்
பக்கமீதில்லையோ வின்பு
சொற்களால் வைதோர்க்குத் துன்பு - நீ
செய்யாது காத்தாயே முன்பு

ஒருமொழி.

3. மொழிக்குமொழிக் குள்ளாய் நின்றாய் - வந்த
மோசபூதகியை வென்றாய்
செழிக்குமடியார்பால் நன்றாய் - யானுஞ்
சேரும்வகை செய்வாய் குன்றாய்

ஒருமொழி.

4. ஏனென்மீதினில் சோமா - உனக்
கித்தனை யாயாச மாமா
வானோர் புகழாயிர நாமா - மிக்க
வாருற்றுயில் வேங்கட ராமா

ஒருமொழி.

## 19.—எமுனாகலியாணிராகம்.— ஆதிதாளம்.

பல்லவி.

அபயங்காரையா - அடிமையின்
அபயங்காரையா.

அநுபல்லவி.

சபையிற் காளியோ டாடிய சங்கரர்
சாற்றியசற்சனனே சாயுச்சியமானோனே.

அபயங்.

சரணங்கள்.

1. துரோகிகள் காலா - சிரோரத்தின
துருவாரு கூலா
புரோகிதன்றுமும் புண்ணியவசு சீலா
பூபதியாய்வந்த பீதாம்பரக் கோலா

அபயங்.

சத்துசித்தானக் கண்ணு - சதோதய
சாம்ப்ராச்சிய சத்திய வண்ணு
அத்துவிதப்பொரு ளாகிய திண்ணு
ஆய்ச்சிகரத்தி லடங்கிய தண்ணு
அபயங்.

3. ஆதிமூல வங்கா - அத்திமுன்
னலறிவந்த துங்கா
சோதியேசிற்சுக வாரிதன புங்கா
சோதனைசெய்யாதே தேவாவென ரங்கா
அபயங்.

4. உன்னைவிட நேரா - யுரியவர்
உண்டோ சொல்வாய் தீரா
அன்னைதந்தைகுருவா யமர்ந்த மாரா
அந்தகன்கிட்டாம லருள்வேங்கட தாரா
அபயங்.

---

## 20. அபூர்வராகம்—ஏகதாளம்.

பல்லவி.

பட்டுபட்டதுபோதும் பாழுஞ்சென்மத்தாலே
பதைபதைக்கின்றேன் பக்ஷம்வைத்தாள்மாலே

அநுபல்லவி.

எட்டிரண்டறியா வேழையைக் காருமோ
எங்குமாய்நின்ற வெந்தையே பாருமோ
மட்டில்லாப்பிரசண்ட மாயவா வாருமோ
மன்னனேயென்பா மயேசுரா சேருமோ
பட்டு பட்டது.

சரணங்கள்.

1. நானெனும்போதத்தில் நாடினேனே நானே
நாதனுய்நின்ற நாதவொலி கோனே
தேனெனுமருளிற் சேருமென்னை மானே
தேவர்கட்கரி தானவொளி யோனே
பட்டு பட்டது.

2. செகம்வளர்பிரகாசா தேவதேவ விசா
சேடன்மேற்றுயில் செல்வமான தேசா

பகரிலாவிரடியாற் பாரளந்த நேசா
பண்ணவரேத்தும் பதுமபாத வாசா
பட்டு பட்டது.

3. அன்பராதியுள்ள மறைத்திடாமுன் ஞண்ட
ஆதியானவா வமலாஞால முண்ட
துன்புறுமமரர் துதிசெய்துன்னை வேண்ட
துய்யவேங்கடா துளபவாரம் பூண்ட
பட்டு பட்டது.

---

## 21. சுருட்டிராகம்—ஆதிதாளம்.

பல்லவி.

கண்மணி யென்மணியே குணநாதா ஓம்
கலங்கி வாடுகின்றேனே நீதா

அநுபல்லவி.

கண்மணியுன்மன மென்விடயத்தினில்
தண்மையாகவில்லையோ தரிப்பனோபூமியில்
கண்மணி.

சரணங்கள்.

1. ஆருஞ்செய்யாதபாபஞ் செய்தேனோ மெய்யா
நீருமதைத்தெரிந்து நீக்கவொண்ணதோ துய்யா
நாருடையருளத்தில் நாடியிருக்கு மையா
நாயேனையாள்வாய்சுக நளினமலர்பூக் கையா
கண்மணி.

2. கஞ்சன்விடுத்தபேய் நஞ்சையமுதா யுண்டு
காளிங்கன்மணிமுடி கதரச்சிதரக் கொண்டு
அஞ்சலிசெய்தவிபீ டணனைக்கண்டு கண்டு
ஆய்ந்துகாத்திட்டபர வயோத்திராமா பண்டு
கண்மணி.

3. ஏழைதனைக்கண்ணலே யெதிராஜசுந்தரா பாரும்
இரங்கிநின்னடியாரி லீனனைச்சேர்க்க வாரும்
வாழைகமுகுசோலை வளர்வேங்கடத்தாய் காரும்
வானவரேத்துந்தல்லிய வரதனேயென்னைச் சேரும்
கண்மணி.

## 22. முகாரிராகம்—ரூபகதாளம்.

### பல்லவி.

மதுசூதாநின் மனமது கல்லோ
மாபாவிக்கிதங்குவா யல்லோ

### அநுபல்லவி.

சதுரர்கட்காய்பிருது சாற்றிணுய் பரனே
சண்டாளஜாமீளன்பா லண்டிணுய் நரனே
மதுசூதா.

### சரணங்கள்.

1. ஒருத்தியிடம்புகுந்து வொருத்தியிடம் வளர்ந்தாய்
உன்னிலையறிவேனோ வுயர்தூணிலே பிறந்தாய்
மரித்தசாந்தீபன்பிள்ளை மதிக்கக்கொண்டுநீ வந்தாய்
மாசிலாப்பெரியோனே மண்டலத்தி னிறைந்தாய்
மதுசூதாநின்.

2. பாபிகளுரைகேட்கில் பதைக்குதேயெந்தன் மனம்
பக்ஷமாய்க்காப்பேனென்று பரிந்துரைப்பாயோ தினம்
தாபிதமாய்க்கருவிற் ருக்காதேயெனை முனம்
தண்டியாரிற்சேர்த்தால் தாதாவுனக்கு கனம்
மதுசூதாநின்.

3. அசுத்தக்காகத்தைநோக்கி யாதரித்தப்பிர காசா
அடியேனைக்காத்தா லுன்னை யார்தடுப்பார்பொன் வாசா
உசிதவிராதனனை யொடிக்கித்தாள்சேர்த்த நேசா
உம்பர்களேத்துஞ்சுக வோங்காரவேங்க டேசா
மதுசூதாநின்.

---

## 23. தன்னியாசிராகம்—ஆதிதாளம்.

### பல்லவி.

கோபமே னருளே - ராமா வென்மேல்
தாபமேன்பொருளே

### அநுபல்லவி.

பாபா ரகிபா பரமனே தீபா
நாபா நர ரூபா ஜெக தாப
**கோபமேனருளே.**

சரணங்கள்.

1. தசவித நாதா தாசர்கள் போதா
கஜ ராஜனை கதி யேற்றினை காப்பாய்
கோபமேனருளே.

2. மதிபதி வாசா மந்திர கிரீசா
விதியே யெந்தன் கதியே யதிபதியே
கோபமேனருளே.

3. பரமனே காரும் பக்திதந் தாளும்
உரமாக வென் னுளமேவிய வுரியோய்
கோபமேனருளே.

4. சகலத் தியாகா சாம்பிராச்சிய போகா
ககவாகன சுக வேங்கட யோகா
கோபமேனருளே.

---

## 24. நாததாமக்கிரிகைராகம்—ரூபகதாளம்.

பல்லவி.

எந்தன்குல தெய்வமே - சிந்தனை தீருந் தவமே

அநுபல்லவி.

பந்தவினைகளை நீக்க
முந்தவருவாயே காக்க
எந்தன்குல.

சரணங்கள்.

1. அண்டமுண்ட வாயனே யருள்தீப நேயனே
கண்டனைக்காத்த நேயனே காருண்ணிய மாயனே
எந்தன்குல.

2. உன்னைவிடக் காப்பவ ருண்டோவெந்தன் றந்தையே
ஓங்காரமாய் நிறைந்த பாங்கான விந்தையே
எந்தன்குல.

3. பேய்முலையுண்ட நாபா பேதையைக்காரும்பிர தாபா
தாயில்லாத்தனி ரூபா தன்மயமான பூபா
எந்தன்குல.

4. புகழ்கொண்டஜெக தீசா புரந்தரன்றுதி வாசா
தகைவுறும்வேங்க டேசா தாரகமான நேசா
எந்தன்குல.

## 25. மோகனராகம்—ஆதிதாளம்.

பல்லவி.

தாமோதரா வுந்தன் ஞராகந்தனிற் சேரும்
தழைக்க நின்று காரும்

அநுபல்லவி.

மாமோக வலைதனிலே சிக்கி மயங்கி தியங்கி யதிலேதங்கி
பாமரன்போ லான பாலனைப்பாருந் தேவே
காம ஜனார்த்தன காருண்ணியமான பூவே
தாமோதராவுந்தன்.

சரணங்கள்.

1. அலைகடலிற்றுயின்ற வையா துய்யனே
அபயமென்றுன்னையா னடைந்தேனே மெய்யனே
சிலையைப்பெண்ணாக்கிய தேவதேவ செய்யனே
ஜெகதலமாய்நிறைந்த செல்வமானக் கையனே
தவறிலாம லென்னை - பிரதாபா
தாங்கிக்கொள்வா யன்னை - சேயை
அவமாகவிடாமலே யாதரிப்பாய் கோலா
அறிவினனையுஞ்சுத்த வடியாரிற்சேரும் பாலா
பவசாகரத்திற்சிக்கிப் பதைக்கின்றேனே சீலா
பதிதபாவனசீதா பதியேபாண்டவ லோலா
தாமோதராவுந்தன்.

2. திகிலடைந்துகூப்பிட்ட தோகைக்குத்துகில் தந்தாய்
துன்பமதையடைந்த தும்பிக்கருளை யீந்தாய்
அகிலமரசுகொண்டோ னறைந்ததம்பத்தில் வந்தாய்
அண்டசராசரத்தை அரக்கனுக்கா யளந்தாய்
ஆதியாக நின்றும் - அசோதை
அகங்களிக்க வென்றும் - சுத்த
நீதியாக வாய்ச்சிக ளுளங் கண்டு
நினைத்தபடியே சுக வனுபவங் கொண்டு
சேதியாதத் தயிர்தனை மிக வுண்டு
ஜெகவிலாசஞ் செய் தாயே பண்டு
தாமோதராவுந்தன்.

3. உனைப்போன்ற வுளர்கள்பா லுருகுவாயே மணியே
வும்பர்களுக்கு மெட்டா வோம்வேங்கட பணியே

எனைப்போன்ற வீனனை யெங்குங்காணுய் குணியே
யென்னசெய்வேன் றேவே யெளியனையா ளணியே
பாபியானேன் வாசா - துதியாத
லோபியானே னீசா - தாசா
கோபியாம லெந்தன் குணத்தினிற் றங்கி
குறித்துக்கொள் ளுன்பா லாகவே பொங்கி
நாபிமீது வந்த நான்மிக வேங்கி
நாடவருள்புரி நாதனே யோங்கி
தாமோதராவுந்தன்.

---

## 26. சங்கராபரணராகம்—ஆதிதாளம்.

### பல்லவி.

என்னகுற்றஞ் செய்தாலும் மன்னித்து ரக்ஷியும்
ஏகமான வேங்கடேசா.

### அநுபல்லவி.

முன்னமுரைத்துவிட்டே னின்னம்புகல மாட்டேன்
பின்னமில்லாமற் ருளிற் றன்னியனுக வின்னுளில்
என்னகுற்றம்,

### சரணங்கள்.

1. உன்னைவிடவெனக்கு வொருபரமுண்டோ சீராய்
உலகளந்தவனே நீ யுவந்தெந்தனைப் பாராய்
அன்னை தந்தைகுருநீ யென்றடைந்தேன் காராய்
அடியார்க்கடியிற்சேர்க்க வனந்தசயனு வாராய்
என்னகுற்றம்.

2. தேகமெடுத்துமேனே சாகவந்ததேகம் மானே
சீரிலாமோகமதிற் சிக்கியுழன்றேன் றேனே
யேகபோகத்தைநினைந் தேங்கிவாடுறேன் கோனே
ஏத்தியிரைந்துகரிக் கெதிரில்வந்தாண் டோனே
என்னகுற்றம்.

3. ஐந்துபூதங்களாக வமைந்துநின்றதொம் பாதா
வடியேனுந்தனைக்காண வடுக்குமோநந்த னுதா
பந்தனைகளை தீரப் பதமலர்சூட்டும் போதா
பசுகுலங்களைமேய்த்த முகுந்தநாத கீதா
என்னகுற்றம்,

4. அந்தகனுமெதிர்த் தமர்புரிவானே வாசா
அன்னேனைஜயிக்க லாகுமோவென்று லீசா
சந்ததநின்னடியார் சார்பிற்சேர்ந்திடுந் தேசா
சகலாத்மசத்ய தீபர் சவுரிராஜப்பிர காசா
என்னகுற்றம்.

---

## 27. முகாரிராகம்—ஆதிதாளம்.

பல்லவி.

என்னேரமுமுனது பொன்னடியையெனது
இதயம்வைத்தருள்புரி கோபாலா

அநுபல்லவி.

தன்னேரிலாவிலக்குமி தன்னியசர்ண்ணிய நாதா
தண்ணளிவேங்கடேச தாரகநாம போதா
என்னேரமும்.

சரணங்கள்.

1. மாதர்களுடன்கூடி மகிழுமவ்வேளை யிலும்
மாணடியார்கடம் மலரடிகாணே யிலும்
வாதர்களுடனீது வசனிக்குநாளை யிலும்
வாரியன்னமுதுண்ணும் வரிசையாங்காலே யிலும்
என்னேரமும்.

2. பாலர்களேயெடுத்து பக்ஷங்கொண்டாடை யிலும்
பத்திரபுட்பங்களாலே பத்திபுரிகை யிலும்
கோலமாகவேயாடை கொண்டுவுடுத்தை யிலும்
கொப்பெனவேயெழுந்து குறிப்பாய் நடக்கையிலும்
என்னேரமும்.

3. பெண்டுபிள்ளைகளுடன் போராட்டவேளை யிலும்
பேதைமாந்தர்களுடன் பேணிப்பேசை யிலும்
அண்டொணுவாபாச வாசைவருகை யிலும்
அழகியமணிமாலே யணியுமப்போதை யிலும்
என்னேரமும்.

4. மலஜலம்விடுகின்ற மனக்கட்டகாலே யிலும்
மதித்துக்கீர்த்தனம்பாடும் மாயோகவேளை யிலும்
பலவிடயங்களேப் பார்த்துநடத்தை யிலும்
பரிந்துநின்சீர்த்தியைப் பலவாய்ப்புகலே யிலும்
என்னேரமும்.

## 28. மத்தியமாவதிராகம்—ஆதிதாளம்.

பல்லவி.

உண்டோவுண்டோ - பரமன்றியிலுண்டோ - வே
றொருசுகமனதே.

அநுபல்லவி.

கண்டோர்மொழிதனிற் கலவாமலே நீ
கணவெனுமொலிதனைக் கருதாமலே நீ
எண்டிசைமுதல்வனை யேத்தாமலே நீ
ஏன்கருக்கொண்டா யிகத்தினிலே நீ
உண்டோவுண்டோ

சரணங்கள்.

1. சிற்றிடையார்மயலிற் சிக்கி - சீதாபதியின்
சேனுயரடிகளை நீக்கி
சுற்றுகிறாய்கொடுஞ் சுழிதனி லலைந்து
சுருதியுமண்டிடாச் சொரூபனை குலைந்து
பற்றிலால்நினைவின்றிப் பார்க்கலா மலைந்து
படைப்புமழிப்புமுத லாகுவோ மிலைந்து
உண்டோவுண்டோ.

2. ஜனகநாரதரிதைச் சாந்தார் - சாயுச்சியநிலை
சாராதிருந்தஜீவர் மாய்ந்தார்
தினகரனுய்நின்ற செல்வனைத் தேடும்
ஜெகமதையளந்தசிற் சொரூபனை நாடும்
இனமானசமயமா யிருப்போனைக் கூடும்
எழுவகைத்தோற்றமாயமைந்தோனைப் பாடும்
உண்டோவுண்டோ.

3. காண்பதெல்லாம்வெறும் பொய்யே - கருத்தழிந்து
காலனுள்வது மிக்க மெய்யே
ஆணவவகமதை யடங்கலும் போக்கு
வரிகரியென்றோர்தா ளடங்கியே தாக்கு
நாணமில்லாமலே நாதன்றாள் தூக்கு
நற்குணமமையாத நரர்களை நீக்கு
உண்டோவுண்டோ.

4. நிராசைதவமடக்கங் கொண்டு - நிகரிலானை
நேசிப்பாய்சத்தியவிரத முண்டு

கராவிழுக்கறுத்திட்ட கதிரோனு நீதன்
கருத்தினிலமர்ந்திடுங் கற்பக நாதன்
வராகவதாரன் வானவர்துதி பாதன்
வாரிஜநாப வைகுந்தம்வாழ் போதன்
உண்டோவுண்டோ.

5. ஆதியினீயசைந்தத் தாலே - அனந்தக்கருவாயும்
அறிந்திலாயம் மாலே
நீதியேயென்னுரை நிலைதனைப் பாரும்
நித்தியானந்தமாய் நிற்பாய்நீ வாரும்
சோதியேயவன்மொழி மறவாமல் சேரும்
சிற்சுடர்வேங்கடேச துணைவனைக் காரும்
உண்டோவுண்டோ.

---

## 29. கலியாணிராகம்—ஆதிதாளம்.

பல்லவி.

பாமன்றுதிதனைப் புரியுங் கோள்
பக்தஜெனங்களா வறியுங் கோள்

அநுபல்லவி.

நரகரிசொரூப நாராயணு வென்று
நானிலத்திற்கையைக் கொட்டித்தட்டி நின்று
பாமன்றுதி.

சரணங்கள்.

1. அண்டரண்டபுவனங்க ளீரேழுக்கும்
ஆதியானேனென்றே தேரும்
கொண்டல்மணிவண்ணன் சண்டப்பிரசண்ட
கோதண்டவுத்தண்டனைப் பாரும்
எண்டிசையேத்துந்தேனை யெதிபதிக்கரு ளானை
வண்டுளபமணியானை வரதவேங்கடக் கோனை
பாமன்றுதி.

2. காமுரமுடைய காலனைவென்றுமே
கருமவினைகளைக் கண்டித்துக் கொல்லலாம்
உரங்கொண்ட வாணவத்தைப்போக்கியே
யுல்லாசமாயகங் காரத்தை வெல்லலாம்

ஒற்றுமைகொள்வீர் பதியை யோட்டிடுவீரே விதியை
கற்றவரேத்து மதியை கருத்தில்வைப்பீர் சுதியை
பரமன்றுதி.

3. நாரதாதி முனிவோர்களைக்கண்டுமே
நாதவிசையில் நடித்திட வேகலாம்
பாரமமைந்த வித்தேகத்தைநீக்கியே
பஞ்சகிர்த்தியப் படைப்புக்காதி யாகலாம்
விரைவாய்கருநீங்கா முனம் வீழ்ந்துதொழுவீரே தினம்
மரைமாதினைசேர்வான்மனம் மகிழச்செய்திடுவீர் கனம்
பரமன்றுதி.

4. முன்வந்தவிடமும் பின்செல்லுமிடமும்
முக்கியமாய்த்தெரியு மப்போ
வன்னெஞ்சைத்திருப்பி வாதுகளை நீக்கி
வாரீர்நிராசையோ டிப்போ
அன்புபொறுமை விண்டு அடக்கம்வாய்மை கொண்டு
சென்றறிவாயே தொண்டு செய்யுமத்தலங் கண்டு
பரமன்றுதி.

---

## 30. புந்நாகவராளிராகம்—அடதாளம்.

### பல்லவி.

நாராயணமந்திரம் - நாரதமுனி - பாராயணமந்திரம்.

### அநுபல்லவி.

கோரபாபமெல்லாஞ் சேரவறுக்கு மந்திரம்
தீரபுருஷருக்குள் சிக்கிக்கொண்ட மந்திரம்
நாராயணமந்திரம்.

### சரணங்கள்.

1. அண்டநிறைந்த மந்திரம் - அது - பிண்டநிறைந்த மந்திரம்
அண்டபிண்டங்களுக்கு மதீதமான மந்திரம்
விண்டவர்களுக்கெல்லாம் விளங்கிநின்ற மந்திரம்
நாராயணமந்திரம்.

2. அடியார்க்குரிய மந்திரம் - இது - கொடியோர்க்கரிய மந்திரம்
பிடியாய்ப்பிடித்தவர்க்குப் பிரபலமாக்கு மந்திரம்
நொடிக்குளமரர்களின் மிடிதீர்க்கவந்த மந்திரம்
நாராயணமந்திரம்.

3. காலனைத்துறத்து மந்திரம் - கால - காலனுக்கரிய மந்திரம்
சாலரிஷிகளுக்குத் தலைமையான மந்திரம்
நீலவேங்கடேசனைப் நிரந்துநின்ற மந்திரம்
நாராயணமந்திரம்.

---

## 31. மத்தியமாவதிராகம்—திரிபுடைதாளம்.

பல்லவி.

வாரிஜநாப வரதாவாரும் ஓ

அநுபல்லவி.

காரிருள்போக்கிக் கருணைசேரும் ஓ
வாரிஜநாப.

சரணங்கள்.

1. நிமலவைபோகா நிஷ்களதேகா ஓ
சமகுணயேகா சாயுச்சியபாகா ஓ
வாரிஜநாப.

2. சகஸ்திரநாபா சதுமறைதீபா ஓ
அகத்தினிற்பூபா யமர்ந்தப்பிரதாபா ஓ
வாரிஜநாபா.

3. ஜெகபதிவாசா சிலைகார்த்த நேசா ஓ
பகவனேயீசா பதிவேங்கடேசா ஓ
வாரிஜநாப.

---

## 32. கலியாணிராகம்—அடதாளம்.

பல்லவி.

விட்டுவிடாதேமனதே வேதாந்தனை

அனுபல்லவி.

விட்டுவிடுவாயானாற் கட்டமாகுமே பின்னே
மட்டிலாமுயல்வினை றெட்டுவோமே முன்னே
விட்டுவிடாதே.

சரணங்கள்.

1. அண்டரண்டங்கடந்த வாதிமாது மணன்
அவனன்றிநமக்கெல்லா மரியபாரா யணன்

உண்டோவாதரிப்பவ ருலகிற்கோலா திணன்
உயர்ந்தவவனடியை யுன்னிசேர்வாய் தணன்
விட்டுவிடாதே,

2. உண்கிறவேளையிலு முயர்ந்தோர்பாற்சேரை யிலும்
ஒல்லிருங்கூந்தலாளே யுவந்துமருவை யிலும்
எண்ணில்லாசங்கற்ப மிசைந்துவருகை யிலும்
ஏத்திக்கீர்த்தனம்பாடு மின்பமாம்வேளை யிலும்
விட்டுவிடாதே.

3. கற்பகத்தருவினன் கருத்திற்கெட்டாதோ னவன்
ககவாகனகெம்பீரன் காசாம்புவர்ணன் றவன்
விற்போர்புரியும்வீரன் விமலவேங்கடன் றுவன்
வேதாகமங்களாக விளங்குமுன்பார் நவன்
விட்டுவிடாதே.

---

## 33. நாதநாமக்கிரிகைராகம்—ஆதிதாளம்.

பல்லவி.

நாராயணுவென்ருல் - மனமே - நமன்நடுங்கிடுவானே

அநுபல்லவி.

காரானேயோலமிடக் கார்த்தபரமன் கதி
சீராகத்துதித்த துரோபதைதுகிற்சேர்த்த பதி
நாராயணுவென்ருல்.

சரணங்கள்.

1. நாரத ரொருசாக்ஷி - இதற்கு - நான்முக ரொரு சாக்ஷி
வாரணமான விபீஷணரொரு சாக்ஷி
வள்ளலானவம்ப ரீஷணர் சாக்ஷி
நாராயணுவென்ருல்.

2. துருவரு மொருசாக்ஷி - சுகமுனி - தூறுவாசருஞ் சாக்ஷி
பருவதராஜன்மகள் பார்வதி சாக்ஷி
பத்திபுரிந்தகண்டா கனனொரு சாக்ஷி
நாராயணுவென்ருல்.

3. அஜாமீள ரொருசாக்ஷி - பிரகலாத - ரநுமந்தரொரு சாக்ஷி
விஜயருக்மாங்கத விமலருஞ் சாக்ஷி
வேதமுனியாகிய வியாசருஞ் சாக்ஷி
நாராயணுவென்ருல்.

4. மந்திரங்களுக்கெல்லாம் - இதுசுக - மௌனமான மந்திரம்
தந்திரமாகவிதை வந்தித்தால்வேங்கடேசன்
சிந்தித்தபடிகார்க்க துஜங்கட்டுவானேயீசன்
நாராயணுவென்ருல்.

---

## 34. மோகனராகம்—அடதாளம்.

பல்லவி.

பதிதபாவனஜக நிர்த்தனு - சுத்த - பரமகல்லியாண குணத்தனு

அநுபல்லவி.

துதித்தமுனிவர்களுளத் திலங்கிய
துரியனேசிற்சுக மா யோங்கிய
மதித்தபூத மைவர்களாய் தங்கிய
மதனராஜ கம்பீரா பொங்கிய

பதிதபாவன.

சரணங்கள்.

1. அன்னை தந்தையாய்வந்த மாதவா - உன்தா
ளடைவனேபுகலுவா யாதவா
பின்னைமாமரந்தன்னி லேறிய
பிரமமேகம்சனைச் சீறிய
தன்னியனேவெண்ணெயேந்தி தேறிய
தற்பராபரமாகக் கூறிய

பதிதபாவன.

2. காலனும்வருவானே காரணு - நிலை
கலங்கிடுவேன்பரி பூரணு
பாலகிருஷ்ணகோபால வத்தனே
பஞ்சபூதமாயுரையுங் கத்தனே
சாலசிற்பரமூல சுத்தனே
சதுமுகன்றனையீன்ற நித்தனே

பதிதபாவன.

3. மங்கைமார்பிடங்கொண்ட மாதவா - மந்த
காசகம்பீரசை யோகவா
தூங்கநான்மறைதேடும் போதனே
துய்யனேசுப்பிரகாச வேதனே

புங்கவாபுண்ணியரூப நாதனே
பூசுராவேங்கடேச பாதனே
பதிதபாவன.

---

## 35. நீலாம்புரிராகம்—ஆதிதாளம்.

### கண்ணிகள்.

1. நிறைந்தமாதவத்தோர்க ணிகழ்த்திபோற்றுமாயனை
நெருங்கிச்சங்கற்பஞ்செய்வாய் மனமே
அறந்தத்தூணிடமாக வவதரித்தப்பிரக்கியாதன்
அணுவிற்கணுவானென்காண் மனமே

2. கொடியவினைகள்பூண்டு நொடியிலாணவங்கொண்டு
கூத்தன்ருள்சேருவோநா மனமே
படியையளந்துநின்ற பாண்டவகுலதாசன்
பதிதபாவனையறி மனமே

3. சத்தியவசனரூபன் சாயுச்சியபததீபன்
சர்வநிறைந்தநாபன் மனமே
நித்தியவைபோகபாலன் நிர்க்குணசுகசீலன்
நிபுணனுகியலோலன் மனமே

4. ஆகமத்துக்கிறைவ னுய்ச்சிமார்தலைவன்
ஆதியேன்றறிகுவாய் மனமே
காகவினைகடிந்த கபடநாடகசூதன்
காமனையீன்றோனவன் மனமே

5. இவனைவிட்டானமனு மெகிறிவருவனுளே
இறைஞ்சுவாயவன்றாளை மனமே
அவனடிகுடியாக வமைந்தாற்சுகமுறலா
மனுகித்துதித்திடுவாய் மனமே

6. சிறுத்தச்சிலைவளைத்துச் செழித்தாராவணன்முடி
சேதித்தவனென்றறி மனமே
கறுத்தக்கராபலத்தைக் கண்டித்தவருளாளன்
கழலிணைமறவாதே மனமே

7. ஐம்பூதமாயமர்ந்து அகிலமனைத்தும்வளர்க்கும்
அஷ்டலக்ஷ்மிசமேதன் மனமே
உம்பர்களறிகிலா னுரியிலமுர்தமுண்டோன்
உணர்விலுறைவானவன் மனமே

8. சுத்தசத்துவரூபன் தோத்திரப்பிரியனவன்
துணைவனமக்கென்றறி மனமே
எத்திசையுநிறைந்தோ னெதிவேங்கடேசன்றுளை
யேத்துவாய்சுகங்கொள்ள மனமே

---

## 36. துஜாவந்திராகம்—அடதாளம்.

பல்லவி.

ராமசீதா வந்தனம் - ஜெய
ராமசீதா வந்தனம்.

சரணங்கள்.

1. சாமவேதப்பிரிய வத்தனே
சான்றோர்சேத்துஞ்சீவ நித்தனே
காமஜனுர்த்தசுக கத்தனே
கடிமலர்துதிபத்த சுத்தனே - ஜெய
ராமசீதா.

2. சற்சமயாசார வாசனே
சவுரிக்கனியையுண்ட நேசனே
துற்சனராக்ஷஸ நாசனே
துரியவாசனேபெரிய பூசனே - ஜெய
ராமசீதா.

3. பஞ்சபூதபதித வாயனே
பச்சைமேனியாய்நின்ற மாயனே
கஞ்சனையீன்றபதம தூயனே
கரியவாயனேவரிய நேயனே - ஜெய
ராமசீதா.

4. வேதங்களறிகிலா வீரனே
வேங்கடேசனுன மாரனே
பாதகிமுலையுண்ட சூரனே
பத்தபாதனேசுத்த தீரனே - ஜெய
ராமசீதா.

---

10919

## 37. அடாணுராகம்—திரிபுடைதாளம்.

பல்லவி.

காலகாலகண்டாகரற்பதியிட - கழலிணைகொள்வாய்மனமே

அநுபல்லவி.

பாலகோலபூபாலனுயமரிட்ட
பாதபங்கஜபணுமுடியூர்ந்திட்ட
நீலமேனிநிஷ்களகுணமாயிட்ட
நினைக்குமடியர்பாலகத்தினிற்றங்கிட்ட
காலகாலகண்டாகரற்பதி.

சரணங்கள்.

1. சகலராஜகெம்பீரசதோதய
சாம்பிராச்சியலோலன்
சத்தியவசனஜானகிதனையணைந்திட்ட
சாமகியானசீலன்
பகலிரவாய்நின்ற பசுபதிவாசன்
பாணன்கரந்தறித்த பாண்டவரீசன்
ககவாகனமேலூறுங் காருண்யநேசன்
காளிங்கனேத்துஞ்சுக கற்பகராசன்
காலகாலகண்டாகரற்பதி.

2. காமக்குரோதலோப மோகத்தைவிடுத்து
கண்டாவொலிதனையடுத்து
கருவிநவத்துவாரக் கதவிணையடைத்துந்தன்
கருத்திணமேலெடுத்து
சொமனிலையில்வருஞ் சுகிர்தத்தைப்புசித்து
சோம்பலிலாமற்சாதனைகளையோசித்து
நாமவேங்கடேசுர நாதனைப்பசித்து
நன்மைபெருகுவாய்நன் ஞட்டினில் வசித்து
காலகாலகண்டாகரற்பதி.

---

## 38. நாததாமகிரிகைராகம்—அடதாளசாப்பு.

பல்லவி.

நாராயணு வென்னு மனமே - சுக
நாரதமுனியேத்து நநதனைத் தினமே
நாராயணுவென்னும்.

சரணங்கள்.

1. காமக்குரோதலோப நீக்கி - பவ
காலன்வதையைச்சதா கருத்தினி னேக்கி
நேமங்கொண்டடியார்தாள் தாக்கி - சுத்த
நினைவினில்வசித்து நிற்பாய்சுகந் தேக்கி
நாராயணவென்னும்.

2. அண்டபிண்டநிறைந்த மாயன் - அவ
னணுவிற்கணுவா யமர்ந்திடுந் தூயன்
தொண்டர்களுக்குச் சகாயன் - நித்திய
துளபவாரகெம்பீர விதேயன்
நாராயணவென்னும்.

3. கபிசனுயிரைக்கொண்ட தீரன் - வீரக்
கணையைக்கரத்திற்பூண்ட காருண்ய சூரன்
அமிசவாகனன்றுதி மாரன் - கல்லா
யமையகலியைக்காத்தவரிவேங்கட வீரன்
நாராயணவென்னும்.

---

## 39. ஆனந்தபைரவிராகம்—ஆதிதாளம்.

பல்லவி.

அடிமையாக்கும் ஆதிமூலமேயுந்தன் அடியர்தாளில்
அடிமையாக்கும் ஆதிமூலமே.

அநுபல்லவி.

கடிவிடந்தனையொத்தவைம் புலனால்
கட்டுப்பட்டுப்பாவி மட்டியானேன் சலனால்
அடிமையாக்கும்.

சரணங்கள்.

1. உனைவிடகதிவேறுகாண்கிலே னும்பர்க்கரசே நாதா
உனைவிடகதிவேறுகாண்கிலேன்
எனையெமன்பாசத் திற்கிறை யாக்காதே
யேழுலகுண்ட விறைவனே நீக்காதே
அடிமையாக்கும்.

2. கஞ்சனேத்தியகமலபாதனே கருணலய நாதனே
கஞ்சனேத்திய கமலபாதனே

வஞ்சிகளின்பத்தை வாழ்க்கையென நம்பி
வானவாதேங்கினேன் வந்தாளெனைப் பம்பி
அடிமையாக்கும்.

3. திரிகுணவோங்காரரூபனே சிற்சொரூப நாபனே
திரிகுணவோங்காரரூபனே
பரியினையூர்ந்த பரமசர் வேசனே
பாக்கியசிலாக்கிய பதிவேங்க டேசனே
அடிமையாக்கும்.

---

## 40. எமுனுகலியாணிராகம்—அட தாளம்.

### பல்லவி.

கரிராஜனேவரந்தாராய் காரணமற்றவருள்கூராய்

### அநுபல்லவி.

அரியபுந்தியாலடையெனு லுனை யாகுமோபோண்ட பூபதி
பிரிவிலாநினதடியர்பாலிடம் பேணிடக்காப்பாயே மாபதி
கரிராஜனேவரந்.

### சரணங்கள்.

1. அண்டபிண்டமான றீங்காரா
ஆனந்தவருடாரு மோங்காரா
தொண்டராதிதுதிக் கிரங்கிய தொம்பதாபதியாகி தங்கிய
கொண்டலேகுருவாக வோங்கிய கோசராகுணமோய் பொங்கிய
கரிராஜனேவரந்.

2. நானெனும்போதத்தினி ஞுதா
நலிந்துசிக்கினேனரு ணீதா
மோனசுந்தாமூர்த்திவாசனே முழுகினேனிருளதனி லீசனே
தானமாநிலைதந்துநேசனே தாசனுக்குவாயெந்தன் போசனே
கரிராஜனேவரந்.

3. பாலனென்றுபாருமகி பூசா
பத்திதந்துகாவேங்க டேசா [னே
காலன்வந்துகலங்கவைப்பனே கடலாம்பவத்தைத் தவிர்க்குந்தெப்ப
சாலஞ்செய்துநோக்காதேவப்பனே சலமுற்றேனிடம்வாருஞ் செப்
கரிராஜனேவரந், [பனே

---

## 41. செஞ்சுருட்டி ராகம்—ஆதிதாளம்.

பல்லவி.

தீனதயாபரனே - யென் - றீவினைநீக் குரனே

அநுபல்லவி.

தீனரைக்காக்கத் துசங்கட்டினச் செய்யா
வீணனைச்சேர்க்க வெண்ணமில்லையோ மெய்யா
தீனதயாபரனே.

சரணங்கள்.

1. எங்குநிறைந்தவனே யெளியவ ருள்ளமுறைந் தவனே
கங்குலிலேநின் று காமவெறி கொண்டு
பங்கமானேன்கண்டு பக்ஷம்வைப்பாய் தொண்டு
தீனதயாபரனே.

2. பாலனென் றுபாரு முன்னடியார் பத்திதனைத் தாரும்
சீலமிலாக்கொலையாள னென்னுமற் பொன்
சேணுயர்பாதத் திருந்தவைப்பா யென்
தீனதயாபரனே.

3. பாவியானயென்னை யிப்பூமியிற் பாலித்துமேன் வைத்தாய்
கோபித்தாலென்னிடக் குற்றங்க ளேகுமோ
கொண்டலேநின்னருளில்லாமற் போகுமோ
தீனதயாபரனே.

4 வேதனையீன்றவாசா வேங்கடேச வேய்ங்குழலூது நேசா
வாதனை தீரவளர் சகசந் தாரும்
வாரிசநாப வரதாயெனைக் காரும்
தீனதயாபரனே.

---

## 42. ஸ்ரீ ராகம்--ஆதிதாளம்.

கண்ணிகள்.

1. ஆதிமூலமேயென்று அறைவாய் ஓ மனமே
அவனன்றிசுகமுண்டோ வழகார்ந்த மனமே
2. ஜனகநாரதாதி சார்ந்தார்காண் மனமே
சாக்ஷியாய்க்கண்டுமேன் மூழ்ந்தாயே மனமே

3. எழுவகைத்தோற்றத்துள் ளிடியுண்ட மனமே
இனியாகிலுங்கருணை யேற்பாயே மனமே

4. பெண்டுபிள்ளைகளுற வெண்ணுதே மனமே
பிரிந்துபோகையிலவர் வருவாரோ மனமே

5. அவனருளில்லையென் றகலாதே மனமே
அன்னைச்சேயைவிட்டதை யறிகிலை மனமே

6. துதித்தோர்கெட்டவரார்சொல் துதியாத மனமே
தும்பிதிரௌபதைநோக்கித் துயர்தீர்ந்தார் மனமே

7. பொய்நம்பிபொய்யாகும் புலத்தோரை மனமே
பெரியோனென்றெண்ணவே புகழ்கிருய் மனமே

8. இருவோர்க்குநடுவாக விருக்கின்ருன் மனமே
இருளில்லாவேங்கடேச னிறைவன்காண் மனமே

---

## 43. தன்னியாசிராகம்--ஆதிதாளம்.

### பல்லவி.

நாராயணனடி சேவிக்கவாரும் நாஞகியமனமே

### அநுபல்லவி.

பேரானந்தமுதத்தைப் பெறலா நொடியினில்
பின்னிடாமன்முயன் று போற்றுவா யடியினில்
நாராயணனடி.

### சரணங்கள்.

1. காமக்குரோதலோப மோகத்தை விண்டால்
கதிநிலை கிடையாது - பொல்லா
கசடர்களுரைதனைக் கருத்தினிற் கொண்டால்
கர்மங்கள் தீராது
நேமமாகவடியாரடி முடி கொண்டு
நித்தியானந்த நின்மலனருள் கண்டு
நாராயணனடி.

2. பெண்டுபிள்ளைகளுற வென்றிட மகிழ்ந்து
பேய்போலலை யாதே - பொல்லா
போகத்தைநம்பி நீண்டநாய்போற் குலைந்து
புத்திகெட்டலை யாதே

கொண்டுபோய்சண்டனம்மை குத்தியே யெரித்து
கூசாமல்வைவனே கொப்பென தெரித்து
நாராயணனடி.

3. அரியதவங்கள்செய்து மடுத்தக் கருதனை
ஆபாசமாக்கி விட்டாய் - நின்
உரியவொலியதனி லொடுங்கிநீயிதனை
யுபாயமாய்ப்பார்த்துக் கெட்டாய்
பிரியமாகியஜன்மம் பின்னிடையாம னின்றும்
பிறவாநெறிதேடாமற் பிழைக்கிறு யென்றும்
நாராயணனடி.

4. அஷ்டமாசித்தியு மடையலாம்புவியில்
ஆதிமூலப் பொருளாய் - சொல்
கஷ்டமென்னவிதிலே கணகணவென்று
கருத்தினிற்சப் தித்துத் தெருளாய்
பக்ஷிமேலூறும்பரந் தாமன்வேங்கடேச னைய்
இச்சையாகவருவ னெண்ணினோர்க்குரியோ னைய்
நாராயணனடி.

---

## 44. துஜாவந்திராகம்—அடதாளம்.

பல்லவி.

முராஹரி முராஹரி முராஹரி யென்பாய்
மூச்சுவீண்போகாமல் முதல்வனை யன்பாய்

அநுபல்லவி.

தரணிதனைமெய்யென்று தங்காதே பண்பாய்
தசவிதநாதன்றுள் தரித்துக்கொள் ளுண்பாய்
முராஹரி முராஹரி.

சரணங்கள்.

1. அநுதிதொட்டிருக்கின்ற வரியயென் னேசா
அடுத்திருக்கின்றோ மானிடதேகந் தாசா
பணுதியாகவிடாதே பக்ஷமா யீசா
பரிந்தென்னுரையைக்கேளும் பாங்கதாய் வாசா
முராஹரி முராஹரி.

2. அடியார்கடிருவடி முடிமீதிற் கொள்ளு
வடியோடுகோபத்தை யறுத்துநீ தள்ளு
மிடிகொண்டவினையர்பான் முழுகாமற் கிள்ளு
முகுந்தனும்த்தான் மூலத்தை யள்ளு
முரஹரி முரஹரி.

3. நானென்னுமாணவ நாடாமற் ருக்கி
நாரிகண்மோகத்தை நலியவே போக்கி
தேனென்னுமவன்மொழிச் சிக்காமற் றாக்கி
செகமதைவளர்த்தயென் செல்வமே நோக்கி
முரஹரி முரஹரி.

4. அளவிறந்தடியார்க் கடைக்கலந் தந்து
ஆதிமூலமென்னு மானைக்கு வந்து
உளவறிகிலாய்நீயு முழலுகிருய் நந்து
உல்லாசநாதனை யுயர்வாக முந்து
முரஹரி முரஹரி.

---

## 45.—மத்தியமாவதிராகம்—ஆதிதாளம்.

### பல்லவி.

நினையாநினைத்துக்கொண்டுவாரும் - நிராகரன்றுதியை
வினையாய்நம்பிமதித்துச் சேரும்.

### அநுபல்லவி.

நினைவினிலெட்டா நீண்டகெம் பீரனை
நித்தியானந்த நிஷ்களசுகு மாரனை
நினையாநினைத்து.

### சரணங்கள்.

1. மலைபோன்றமலமெல்லா நீங்கும் - மண்ணுண்டவன்றன்
வாரிசமந்திரத்தாள் தாங்கும்
கலைஞானமிகுத்திடக் காத்துவருவாய் பொது
காலனவநினைவைக் கலங்கச்செய்யுமே யது
நினையாநினைத்து.

2. தசநாததலந்தனி லொட்டி - தசவிந்திரியங்களைத்
தான்றுனைதும்புறுற் கட்டி
அசையவிடாமலே யிசையவே தங்கி
ஆசைகொண்டனுபவ வன்பினிற் பொங்கி
நினையாநினைத்து.

3. பத்தரைக்கண்டுபதம் பணிவாய் - அவருரையால்
பாழுநினைவைவிட்டுத் துணிவாய்
சித்துகள்செய்யவுஞ் சுத்த மாகுவாய் நீயே
செய்வாய்நல்லெத்தனங்கள் சித்திபெறவே சேயே
நினையாநினைத்து.

4. பெண்டுபிள்ளைகளைப் பாராதே - நாம்வசிக்கின்ற
பிண்டக்கருவியிற் சேராதே
அண்டர்களுக்கரிதான வேங்க டேசனை
அடைந்தாற்கதிபெறலா மானந்தமாம் வாசனை
நினையாநினைத்து.

---

## 46.—சஹானாராகம்—அடதாளம்.

### பல்லவி.

அம்மம்மா ஈதென்ன மாயமோ - இம்மனோமாயம்

### அநுபல்லவி.

அம்மம்மாவென்றுரைப்பதற் குள்ளே
அவமென்றெண்ணுதே யாவுமே முள்ளே
அம்மம்மா ஈதென்ன.

### சரணங்கள்.

1. காண்பதற்கும் ரூபங் காணேனே - கண்டுதெளிய
கருத்திலாம விழுந்து வீணேனே
ஆண்டவாயென் றாற்றுதே பின்னே
அயிக்கமாகாம லாடுதே பொன்னே
அம்மம்மா ஈதென்ன.

2. அண்டாண்டமலைந்து வருகுதே - அரைக்ஷணத்தில்
ஐம்பூதமாகநின்று பெருகுதே
கண்டுபிடிப்பதற் காரண மில்லையே
கலங்கியதன்வழிக் காளானேன் றொல்லையே
அம்மம்மா ஈதென்ன.

3. மூன்றாசையைமிகுத்து வளர்க்குதே - உள்ளுக்குள்ளாக
முன்னிலையில்லாமற் றளர்க்குதே
ஆன்றவிதனைலடைந்த சிறுமையை
ஆற்றுவாரைக்காணே னையாயிவ் வறுமையை
அம்மம்மா ஈதென்ன.

4. திருப்பதிவேங்கடேச சுந்தரா - இத்தீவினையைத்
தீர்த்துக்காருந் திவ்விய மந்திரா
கருப்பதியினிற் கலந்தனன் தந்திரா
காரணமற்றக் கமலனே யிந்திரா
அம்மம்மா ஈதென்ன.

---

## 47. சங்கராபரணராகம்—ஆதிதாளம்.

### பல்லவி.

தாணிபன்வாசனே வரமருளீசனே
ஆரனயனேசனே ஆனந்தபூசனே
தாணிபன்வாசனே.

### சரணங்கள்.

1. தாணிதனிலேசிக்கித் தயங்கிமயங்கி னேனே
தவித்தாலுனக்கழகோ தசவிதநாத கோனே
அரணிநிலையைத்தந்து அருடருந்திவ்விய தேனே
அசைவிலாத்தீபம்போ லாதரிப்பாய் பெம்மானே
தாணிபன்வாசனே.

2. ஆதிமூலமேயென்று அழைத்தவானைக்கு அன்று
சோதிசக்கரங்கொண்டு துணித்தாய்க்ராவை நின்று
நீதியேயென்வினையை நீக்கியாள்வாய்நீ யின்று
வாதியேபாரப்பிரம வகுளாபரணு நன்று
தாணிபன்வாசனே.

3. கங்காதரன்றுதிக்கும் கஞ்சநேத்திர சூத்திரனே
காளிங்கன்மேனின் களித்திடுந் தோத்திரனே
பொங்கும்வேங்கடாசல புருஷோத்தம நேத்திரனே
பூதகிமுலையுண்ட புண்ணியசற் பாத்திரனே
தாணிபன்வாசனே.

---

## 48. காம்போதிராகம்—ஆதிதாளம்.

### பல்லவி.

எந்தநாடனிலுன்னிடமடைவேனோ - வேங்கடேசனுனைமூர்த்தியே
அந்தநாட்களிதின்னதென்றறிவேனோ.

அநுபல்லவி.

விந்தையாகவென் மனமது களிக்கவே
தந்தை தாயுமாய்நின் றுன்றுளடி குளிக்கவே
இந்த தினமந்த தின மென்பா யளிக்கவே
யெந்தனையாண்டுமே யேற்பாய் தெளிக்கவே
எந்தநாடனி·

சரணங்கள்.

1. சித்தர்முனிவர்கள் திகழ்ந்துபுன்னகைகொள்ள-செல்வத்தேவரு
முத்தமநிலையிதென் றுபத்தர்கள் விள்ள - கந்தருவர்கள்
தத்திமிதிமியென்று தாளங்க ளொலித்திட
தகைவுடனடியருந் தழுவியே சலித்திட
எத்திசைகளுங்கீர்த்தி யின்பமாய் சொலித்திட
எப்போதடைவேனையா செப்பாய் வலித்திட
எந்தநாடதனி·

2. மாமுடிபூண்ட மா தவாஜெக தீபா - மாரனையீன்ற
மாநிலத்தையளந்தமந்திர பூபா - மச்சாவதாரா
மானங்கார்த்தமா தபசிகள் சொரூபா
மந்திரகிரிதனைமத்தாக்கிய வரூபா
மாதுகனியையுண்டமணிவண்ண நிரூபா
மன்னுமலையெடுத்த கண்ணுவண்ணு வுரூபா
எந்தநாடதனி.

3. ஆகமங்களிலேகமான வீசா - ஆனந்தமாக
ஆதிமூலசர்வேசசுக தேசா - அற்புதமாக
நாகவரசன்மீதி னடிக்கின்ற வாசா
நான்மறைகளுக்கெட்டா நாதனே தாசா
போகவருடனிலே பொலிந்தப்பிர காசா
போதாலக்குமிசமேத நீதாவசோதை பாசா
எந்தநாடதனி.

---

## 49. பைரவிராகம்—ஆதிதாளம்.

பல்லவி.

பசுக்குலங்களைமேய்த்தோ னடிதொழ வாராய் - வினைப்
பாசமறுத்தெறிவாய் பஞ்சாயுதனைப் பாராய்

அநுபல்லவி.

முசுகுந்தநாப முராரிசர் வேஸ்வரன்
மூலமுதற்பொருளான பராபரன்
பசுக்குலங்களே.

சரணங்கள்.

1. அத்தியைக்காத்த வகுண்டிதயாதவ நாபன் - எங்கும்
ஆனந்தமாய்த்தங்கு மாலிலையூர்ந்தப் பிரதாபன்
எத்திசையோரேத்துமெம்மா ஞண்டவன்
எதிகளுளந்தங்குமெழிறுங்கத் தாண்டவன்
பசுக்குலங்களே.

2. பெண்டுபிள்ளைச்சதமென்றுஎண்ணியெண்ணி வீணாய்-மிக்க
பேய்போல்வருமெம பாசவலைதனிற் பேணய்
சண்டப்பிரசண்டவுத்தண்ட சௌரியை
சாகாமுன்னங்காணுஞ் சத்வ வுதாரியை
பசுக்குலங்களே.

3. சச்சிதானந்த சகலமுமுண்டசற் பெரியோன் - தன்னிய
தாயாஞ்சத்தியபாமைமனோகரப் பிரியோன்
உச்சிதவுத்தவ ருல்லாச சிதேவன்
ஓம்வேங்கடேச ஞாலகளந்த பாவன்
பசுக்குலங்களே.

---

## 50. கமாசுராகம்—ஆதிதாளம்.

பல்லவி.

காமஜனகசுகுமாரா நந்தனு
கானகமிலங்கிய காளிங்க விந்தனு
காமஜனக.

சரணங்கள்.

1. நாதநாதப்பிரக்கியாதா சுந்தரா
நடனகெம்பீரசுரேந்திர விந்திரா
காமஜனக.

2. சுபகரசற்குணசுஜரிஜ நாபா
சுருதியாலறியொணுத்தோன்றலே நீப
காமஜனக.

3. தரணியையாண்டிட்ட சத்தியனே வாசா
தாரகவேங்கடேச தாண்டவ யீசா
காமஜனக.

---

## 51.—ஸௌராஷ்டகராகம்—அடதாளம்.

### கண்ணிகள்.

1. உலகளந்தவனடி மறவாமலனுதின
முரிமையாகுவாய் பொல்லா மனமே
பலனில்லாசெகவாழ்வைப்பார்த்துமேன்வீணுகப்
பதியைமறக்கின்று யினமே

2. பாசசூலகரம் பதித்தவேமராஜன்
பக்ஷம்வைக்கானேவோ மனமே
காசைமெய்யென்றெண்ணி கருத்தழியவேண்டாங்
காருண்ணியமானயென் னினமே

3. அடியார்க்கெளியோனுக வமைந்தவாதிமூலன்
அகத்திற்றங்கினனவன் மனமே
கொடியோர்களுக்கெட்டா கோபாலசுந்தரன்
கூற்றுவனுய்வருவ னினமே

4. திரிகுணசுகுமாரன் திவ்வியதொம்பதவாரன்
தீனரக்ஷகனவன் மனமே
கருவினைகளைந்திட்டக் கமலபாதசெம்பீரன்
காசாம்புமேனிபூண்டோ னினமே

5. ஆகமகுலபாக னுய்ச்சிகளிடசீல
னுதியென்றறிகுவாய் மனமே
பாகசாதனன்காணு பஞ்சேந்திரியலோலன்
பஞ்சவர்தூதன்கா ணினமே

6. அரனயனரியான ஐம்பூதவடிவினன்
அணுவிற்கணுவானவன் மனமே
வரமளித்திடவந்த வாழ்வேங்கடேஸ்வரன்
வரதனென்றறிகுவா யினமே

---

## 52. ஆனந்தபைரவிராகம்—ஆதிதாளம்.

பல்லவி.

ஆயர்பாடியிலமர்ந்தவீசனே - அத்திமுறையைக்காக்க
ஆதிமூலமாய்வந்தநேசனே.

அநுபல்லவி.

மாயமானைக்கொன்ற மந்திரவில் வீரனே
மந்தகாசவிந்திர தந்திரகெம் பீரனே
ஆயர்பாடியிலமர்ந்த.

சரணங்கள்.

1. அண்டபிண்டமான சூத்திரா - அமிசவாகன
அயன்காணச்சுத்தவமல நேத்திரா
வண்டேர்மலர்க்குழன்மாது மணாளனே
வானவர்க்கமுதமீந்த குணாளனே
ஆயர்பாடியிலமர்ந்த.

2. மருதமரத்தைப்பெயர்த்தபாதனே - மாபெலியிடஞ்சென்று
மமதைநீக்கியமந்திர போதனே
அருவுருவாகி யமர்ந்தவோங் காரனே
அன்பரிடரையகற்றுஞ்சிங் காரனே
ஆயர்பாடியிலமர்ந்த.

3. பூதகிமுலையுண்ட கண்ணனே - புரந்தராதிகள்
போற்றும்வேங்கடமேக வண்ணனே
பாதகனுன்னைப்பணியவரந் தந்து
பாக்கியவடியாரிற்பாலிப்பாயு வந்து
ஆயர்பாடியிலமர்ந்த.

---

## 53. காம்போதிராகம்—ஆதிதாளம்.

பல்லவி.

ஆதிமூலசர்வேசனடிபணிவாய் - ஐம்புலன்சேர்மனமே

அநுபல்லவி.

வாதியாதெனைவகையிலாத் தனமே
வானவர்தானவர்போற்றிய கனமே
சோதிப்பிரகாசதுல்லியசிற்சுக யினமே
சேர்ப்பாயெந்தனைநன்றி - காப்பாய்கருத்திலொன்றி
ஆதிமூலசர்வேச.

**சரணங்கள்.**

1. பெண்டுபிள்ளைகள்சதமென்று பாராதே - பேயொத்தசீவர்
பேதைமாந்தருறவென்று சேராதே
கண்டபடிகாமவேட்கை கொள்ளாதே
கருத்தினின்மாய்கையைக்கலக்க வில்லாதே
அண்டொணுமுதல்வனையகத்தாற் றள்ளாதே
ஆர்வாயடியரைப்போற் - சேர்வாய்வாழ்வினிலிப்போ
ஆதிமூலசர்வேச.

2. நன்னிலையில்லாநவத்துவாரக் கூடு - இதைநம்பி
நாலுபேருடன்நடனஞ்செய்கிறாய் நாடு
தன்னியவாசகவெமதருமதூதர்க ணம்மை
தாறுமாறாகக்கொண்டுதடியாலடிப்பா ரெம்மை
பன்னிமறைகளைத்தும்பதிவேங்கடேசர் தம்மை
பாராயவனடியிற் - சீராயுன்சேர்முடியை
ஆதிமூலசர்வேச.

3. கலைவளர்கண்ணனைக் காணவழுத்தி வாராய் - கருதாவிடிலுனை
கடியபிறப்பினிற்கலங்கவருமே பாராய்
மலையாமலேராமன்மலர்ப்பத மேற்றுவாய்
மறைகுணசம்பன்னனுகலாந் தேற்றுவாய்
விலையில்லாபஞ்சகிர்த்தியம்விளங்கிடும் போற்றுவாய்
வீழ்ந்திடுங்காயத்தாற் - சூழ்ந்திடுஞ் ஞாயத்தால்
ஆதிமூலசர்வேச.

---

## 54. ஸ்ரீராகம்—திரிபுடைதாளம்.

**பல்லவி.**

கொண்டானடிக்கிறார் - கோபாலமாதர் - கொண்டானடிக்கிறார்.

**அநுபல்லவி.**

வண்டுறைகமலவல்லிசரணர்க்கு வைகுந்தசோதிவகுளாபரணர்க்கு
கொண்டானடிக்கிறார்.

**சரணங்கள்.**

1. மண்டலமெங்குநிறைந்த மன் னுதற்கு
மச்சாவதாரமணி மந்திர வேதற்கு
கொண்டன்மணிவண்ணன் கோபால சூதற்கு
கோபியர்சூழ்ந்து குணனந்த பாதற்கு
கொண்டானடிக்கிறார்.

2. நவரத்தினசிங்கா தனத்தினை யிருத்தி
நான்குவேதங்காணு நாதனைப் பொருத்தி
பவமதைத்தகர்த்தாள்வா னென்று கருத்தி
பத்மநாபாவென்று பல்லாண்டு திருத்தி
கொண்டானடிக்கிறுர்.

3. அத்தர்புனுகுசவ்வாதுநற் சந்தனம்
ஆனந்தநாதனுக் கர்ச்சித்து வந்தனம்
சித்தர்முத்தரேத்துஞ் செங்கதிர்க் கிந்தனம்
சீதாபதிசெக னுதற்குப் வந்தனம்
கொண்டானடிக்கிறுர்.

4. சங்கொடுசக்கர மேந்திய நாயற்கு
சண்பகப்பூங்கா வனத்திடை மேயற்கு
இங்கிதநாத விசைகொண்ட வாயற்கு
எம்பெருமானென்று வேத்திய மாயற்கு
கொண்டானடிக்கிறுர்.

5. சத்துசித்தானந்தசகலாத்ம கோனுக்கு
சவ்வியசாசிபரியோட்டிய வானுக்கு
அத்துவிதானந்தவாகமத் தானுக்கு
ஆலிலையிற்றுயின் றயனைத்தந் தோனுக்கு
கொண்டானடிக்கிறுர்.

6. அண்டரண்டபுவனங்களும் வாழவே
ஆயன்மணிவண்ணன்மாயனைத் தாழவே
வண்டுளபமலர்வழங்கி யாழவே
வாழ்வேங்கடேசவரதனைச் சூழவே
கொண்டானடிக்கிறுர்.

---

## 55. நாததாமக்கிரிகைராகம்—ஆதிதாளம்.

### பல்லவி.

மனிதரைத்தொழு மனமே - மனிதவுரு
மாட்டைத்தொழாதே கனமே

### அநுபல்லவி.

மனிதரிலும்மரங்கள் மதத்திடும்நாய்நரிகள்
மட்டில்லாக்காளிகூளி மார்ச்சாலம்போலிலாத
மனிதரைத்தொழுமனமே,

சரணங்கள்.

1. கழுதைகள்கடம் பாகி - காட்டெருமையாய்
கத்தும்யானைக ளாகி
அழுதழுஞ்சூர்களாகி ஆடுகரடியாகி
அற்புதசிங்கமாக வமைந்திராவத்துவித
மனிதரைத்தொழுமனமே.

2. பன்றிபுலிக ளாகி - பகரிடாத
பாழும்பல்லிக ளாகி
குன்றுகுதிரையாகி கோழிகொக்குகளாகி
கோட்டானைப்போலிலாத கொற்றவரேயுயர்ந்த
மனிதரைத்தொழுமனமே.

3. ஆந்தைபருந்து மாகி - அடக்கமான
ஆமையன்னங்க ளாகி
கூர்ந்தகாகங்குருவி குயில்கிளிமயிலாகி
குரங்குகளாயிலாத குணவந்தரேபெரிய
மனிதரைத்தொழுமனமே.

4. பரமானவேங்க டேசன் - பக்தர்தாள்களை
பரிந்துதுதித்தால் வாசன்
திரமாகவேவயிக்க ஜீவன்முத்திநிலையை
வரமாகத்தந்துநம்மை வளர்ப்பிப்பனவனை
மனிதரைத்தொழுமனமே,

---

## 56. அடாணாராகம்—ஆதிதாளம்.

பல்லவி.

ஆயர்பாடிதனிலமர்ந்த சற்குணாளா அண்டரண்டநிறைந்த
ஆதிசோதிப்பிரகாச நன்மணாளா.

அநுபல்லவி.

மாயரக்கிஸ்தனத்தின் மகிழ்ந்ததரம்வைத்து
மண்மேன்மடியச்செய்து விண்மேல்வைகுண்டமெய்து
ஆயர்பாடிதனி.

சரணங்கள்.

1. இரவிமதியினர்களேத்தி தொழுமெந்த
னிறையோகு வீரா

பரவியவெழுவகைத் தோற்றத்திற்காதார
பாஞ்சசன்னிய மாரா
சரஜிஜநாபசாம்பிராச்சிய வை போகா
தாரகயோகசதாநித்திய பாகா
கரதூஷணர்முடியைக் கண்டித்த யோகா
கமலாகமலவல்லி விமலா வமல தேகா
ஆயர்பாடிதனி.

1. சங்குசக்கர சாரங்கமேந்தியவீரா
சத்தியதீர ரூபா
சரஸ்வதிமருவியசதுமுகன்பரவிய
சாம்பிராச்சிய தீபா
பொங்குபாற்கடலிற்றங்கிய நாதா
பூசுரசுக நாரதர்போற்றும் பாதா
சங்கரருளந்தனிற் றங்கிய வேதா
சதுரா சர்வேஸ்வர மதுரா மாயா போதா
ஆயர்பாடிதனி.

3. அக்ஷிகமலலக்ஷுமி ஆனந்தரகுநாதா
ஐவரைக்காத்த தோதா
பக்ஷிவாகனபோதா பவளவாயிதழொளி
பலராமசக நீதா
எச்சுதலற்றவேகாக்கிரக சித்தா
எதிபதியாகிய வேகனே முத்தா
அச்சுதவரிவேங்கடேச நற் சுத்தா
அய்யா வானந்தரூபக் கையா மெய்யா வத்தா
ஆயர்பாடிதனி.

---

## 57. நாட்டைராகம்—ஆதிதாளம்.

பல்லவி.

ராமராமராமராமனே - கோதண்டபாணி
ராமராமராமராமனே

அநுபல்லவி.

ராமனேபன்னிரு நமனேசகஸ்திர
நேமனேதசரத பூமனேகோதண்ட
ராமராம.

சரணங்கள்.

1. வேதமுடிவான ரூபனே - எங்கும்வியாபக
நாதமுடிவான சோபனே - விஞ்ஞான தீப
போதனுமேத்திய புண்ணியவ ரூபனே
புஜபலரகுகுல புராதன தாபனே
ராமராம.

2. லக்ஷிமிமார்பில்கொண்ட மோகனே - பாகனே
பக்ஷியின்மேலூருந் தியாகனே - பாரளந்தோனே
யக்ஷார்கின்னரரேத்திய யாகனே
ஏழுலகுண்ட ஸ்ரீயெதிபதி போகனே
ராமராம.

3. அண்டபிண்டமான நேத்திரா - அடியர்களை
ஆதரிவேங்கட பாத்திரா - ஆனந்தவதாரா
எண்டிசையும் புகழ்கொண்டு விளங்கிய
ஏகனேசுந்தர பாகமாய் தங்கிய
ராமராம.

---

## 58. சௌராஷ்டகராகம்—அடதாளம்.

பல்லவி.

உச்சிதபாண்டவரங்கா - சச்சிதானந்த நரசிங்கா

சரணங்கள்.

1. அச்சுதா யசோதை பாலா
அண்டரண்டங்கடந்த லோலா
எச்சற்கனியையுண்ட சீலா
யேகமானவாதி மூலா
உச்சிதபாண்டவ.

2. பாலனென்னும் பார்த்து காரும்
பாரளந்த மூர்த்தி வாரும்
கோலமான தாளைத் தாரும்
கோவிந்தனே யென்னைச் சேரும்
உச்சிதபாண்டவ.

3. சாதுசங்கஞ்சார்ந்து தெள்ளேன்
சாதுதாள்சிரத்திற் கொள்ளேன்

ஏது காரணத்தாற் கள்ளேன்
மீதுகோபஞ் செய்தீர் தள்ளேன்
உச்சிதபாண்டவ.

4. அடியேன்செய்த குற்ற மீசா
அங்கீகாரங்கொள்வீர் வாசா
படியானசாயுச்சிய தேசா
பதுமபாதவேங்க டேசா
உச்சிதபாண்டவ.

---

## 59. சங்கராபரணராகம்—திரிபுடைதாளம்.

பல்லவி.

கருணாகரனே - யெனையாள்வரனே

அநுபல்லவி.

தருணமுன்றருள் தரவேயெனக்கு
துருவன்மணியேமுன் றுள்வதுனக்கு
கருணாகரனே.

சரணங்கள்.

1. கொடியேன்வினை நீரகலவே கொய்து
நொடியிற்கருணைவரவே பெய்து
படிமேலெலைநீர் பண்பாய் செய்து
பிடிகொண்டமனதை முழுகநீ வெய்து
கருணாகரனே.

2. முன்னோர்களைக்காத்தது மெய் யென்பேன்
மூடனைக்காராவிட்டாற் பொய்நா ளென்பேன்
அன்புகொண்டவுந்த னடியாரை யன்பேன்
அகத்திற்றரிக்கிலையமுந்தவே துன்பேன்
கருணாகரனே.

3. பூதகிசம்மாரபுராதன நாதா
சோதனைசெய்யாதே தோத்திரப் போதா
நாதனென்றுன்பதத்தை நம்பினே னீதா
நங்கைலக்ஷ்மிசமேதா நளினபொற் பாதா
கருணாகரனே.

4. வேதன்முதற்காணு வேங்க டேசனே
விமலவமலசுக விஞ்ஞான பூசனே
சூதமெனன்றெண்ணுமே சுபேந்திர வாசனே
பாதகனையாள்வாய் பலபத்திர நேசனே
கருணாகரனே.

---

## 60. நீலாம்புரிராகம்—ஆதிதாளம்.

பல்லவி.

அண்டநிறைந்தவெங்க டாதிமூலப் பொருளே
அடியேனைக்காருந் திரு வருளே

சரணங்கள்.

1. தொண்டரடித்தொண்டனாய்த் தொகுத்திடச்சேரு மய்யா
பண்டையவினையேனைப்பரிந்து காத்தரு ளய்யா
அண்டநிறைந்த.

2. அகத்திலுனைத்துதிக்க அருட்டந்தருளுஞ் செய்யா
இகத்திலுன்பாலடைய இரங்கிக்காரு மெய்யா
அண்டநிறைந்த.

3. சுத்தசத்துவதீரா தொல்லுலகாண்ட மாரா
பத்தருளத்திற்சீரா பதிந்திருக்கின்ற சூரா
அண்டநிறைந்த.

4. நானெனனும்பாவத்தை நாடாமல்வேங்க டேசா
கோனெனனுமுன்பதத்தைக்கொடுத்துக்காத்தரு நீசா
அண்டநிறைந்த.

---

## 61. ஆகிரிராகம்—ஆதிதாளம்

பல்லவி.

திருமலைநாதா என்பவமதை தீர்ப்பாய்நற்போதா

அநுபல்லவி.

மருமலர்குழலியை மார்பிலணிந்த வாரா
மண்டலத்தையளந்த மாபோகவுத் தாரா
திருமலைநாதா.

சரணங்கள்.

1. அண்ட முண்டவனே - அடியாருளம்
அடைந்தசற்குணனே
பண்டரியைக்காத்த பரப்பிரம்ம ரூபனே
பாலகனைவிடாதே பாஞ்சசன்னிய நாபனே
திருமலைநாதா.

2. மதன கெம்பீரா - மந்திரகிரியை
மதித்தவோங்காரா
புதன்முதலோரேத்தும் புருஷபுண்ணிய தீரா
பொங்குபாற்கடற்றங்கும் பூதகிவதை சூரா
திருமலைநாதா.

1. வேதனை யின்றோய் - வேங்கடேச
விமலமாய்நின்றோய்
சோதனைபுரியாதே சூக்ஷாசூக்ஷவ தாரி
தொண்டரடிக்குடியாய் சேர்ப்பாய்கருணை வாரி
திருமலைநாதா.

---

## 62. தன்னியாசிராகம்—ஆதிதாளம்.

பல்லவி.

நினைவினிலிருந்து நீ பதிப்பாய்
நெடியோனடிதனைக் கண்டு துதிப்பாய்

அநுபல்லவி.

அனைத்துலகாய்நின்ற ஆதிமூல சர்வேசன்
அந்தரியாமியாய் ஆனந்திக்கும் பிரகாசன்
நினைவினி லிருந்து.

சரணங்கள்.

1. சகலவைபவசுக மாரன்
சாயுச்சியசாம்பிரதாய வீரன்
செகவிலாசநிர்த்தனன் செல்வராஜகெம் பீரன்
செங்கையாழிதரித்த சேதனஞ்சிறந்த சூரன்
நினைவினி லிருந்து.

2. அண்டபிண்டநிறைந்த மாயன்
அவனறிவானமது வெண்ணம் தூயன்
சண்டனண்டாமுன்னஞ் சதிரோனருள் பெறுவாய்
சத்தியசத்துவன்றனைப் பத்தியாக வுறுவாய்
நினைவினிலிருந்து.

3. காமக்குரோதலோப நீக்கி
கடையோருறவுகளைப் போக்கி
நேமமாகப்பத்தர்தாள் நெறிதனை யணிந்து
நித்தியனாய்நின்ற வேங்கடேசனைப் பணிந்து
நினைவினிலிருந்து.

---

## 63. பூபாளராகம்—திரிபுடைதாளம்.

பல்லவி.

கண்ணாநின்கழலிணை யடியில் - எப்போ
கலந்துகொள்வேனந்த படியில்

அநுபல்லவி.

புண்ணார்ந்தமேனியும் போகுமே அய்யனே
என்னாளுன்னடிக்குடியேறுவேன் மெய்யனே
கண்ணாநின்கழலிணை.

சரணங்கள்.

1. பூதகிமுலையுண்ட வாசா - பஞ்ச
பூதங்களாய்நின்ற நேசா
வேதன்பரவுங்கோ வேசா - சுக
வேதியர்மகிழ்ந்திடும் பூசா
நாதத்தின்முடிவான நன்மணியே கேசா
நீதற்றசங்கரர்தேடு மனோல் லாசா
கண்ணாநின்கழலிணை.

2. க்ஷீராப்திசயனவுத் தாரா - பவ
தீவினைநீக்குவாய் மாரா
சூராதிகளைவென்ற தீரா - சுத்த
தொல்லுலகாண்ட வோங் காரா
காரானையைக்காத்த கபடநாடக சூரா
கமிசமர்த்தனஜக காரணரீங் காரா
கண்ணாநின்கழலிணை.

3. கல்லைப்பெண்ணாக்கிய நிமலா - சவுரி
கனியையுண்டகண்ணா கமலா
சொல்லுக்குள்ளாய்நின்று அமலா - வுந்தன்
றிருவண்டரிற்கூட்டுவாய் விமலா
எல்லையிலாவளர்ந்தோங்கிய நாமா
ஏழையையாள் செகன்னாதனே பூமா
கண்ணாநின் கழலிணை.

4. அடுத்தோரைக்காக்கும் பிரதாபா - பால
னறியாமைநீக்கியாள் நாபா
விடுத்தோனென்றெண்ணாதே பூபா - வுந்தன்
விரைபதமிலா துண்டோ தீபா
மடுவிற்கரா வினையறுத்தமதி வதனா
மாவேங்கடேசுவரா மண்ணையுண்ட சுதனா
கண்ணாநின் கழலிணை.

---

# ஸ்ரீமத் துக்காராமர் விஷயம்.

## 64. அடாணாராகம்—ஆதிதாளம்.

பல்லவி.

துக்காராமன் றிருவடியே சரணம் - துல்லியதேவாரிய
துக்காராமன் றிருவடியே சரணம்.

அநுபல்லவி.

மிக்கானவெழுவகைத் தோற்றத்தை வென்றிட்ட
மீசுரமாஞ்சோதி ரூபமாய் நின்றிட்ட
துக்காராமன்.

சரணங்கள்.

1. தானதர்மபர வுபகாரங்களைத்
தலத்தினர்க்கீர்ந்த போதன்
தக்ககுடும்பந்தனிலொக்கபொருந்திவாழ்ந்த
தன்னியனான நாதன்